Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 21 செவ்வாய்க்கிழமை (05.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 198

ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

RAMCO CEMENT

சீமெந்து

# பொதுக் கட்டமைப்பை செயற்படுத்த சர்வதேசம் அரசை வற்புறுத்தவேண்டும்

## விடுதலைப் புலிகள் வலியுறுத்தல்

(கிளிநொச்சி)

**அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டமையை வரவேற்ற சர்வதேச சமூகம், அத்துடன் நின்றுவிடாது உடன் படிக்கையை அமுல்படுத்த சந்திரிகா அரசை வற்புறுத்தவேண்டுமென சர்வதேச சமூகத்திடம் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

**அதேசமயம் சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கும் வற்புறுத்தல்களுக்கும் செவி சாய்க்காது சிங்கள அரசு தவறினால் உடன்பாட்டின் பிரகாரம் வடக்குக் கிழக்கிற்கான உதவி நிதியை புலிகள் இயக்கத்திற்கு வழங்கி தமிழ் மக்களின் துயர் துடைக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.**

ஆழிப்பேரலைக்கு பின்னான செயற்பாட்டு முகாமைத்துவ கட்டமைப்பு என்று பெயர் சூட்டப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுவிட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நடந்து ஆறு மாதங்களின் பின்பு சர்வதேசத்தின் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் சந்திரகா அரசு அரை மனதுடன் உடன்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளது.

'சுனாமி' ஏற்படுத்திய பேரழிவுகளைக் கண்டு - திகைத்த உலக சமூகம் பாதிக்கப்பட்ட மக்கள் புதிய வாழ்வை அமைக்க நிதி யுதவிகளை வாரி வழங்கின. அந்தப் பெரும்நிதியை நேரடியாக சிங்கள அரசுக்கூடாகவே செல விடவேண்டும் என்று சந்திரிகா அரசு சர்வதேச சமூகத்தைக் கோரியபோது புலிகள் இயக்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது-அதற்கான விளக்கங்களையும் அளித்தது.

போர்நிறுத்த உடன்பாட்டைப் போல புலிகள் இயக்கத்தையும் சிங்கள அரசையும் சமபங்காளிகளாகப் பார்த்து உதவி நிதியைப் பகிர்ந்தளிக்க விரும்பிய உலக சமூகத்தின் முடிவை ஏற்க ஆரம்பத்தில் சிங்கள அரசு மறுத்தது. காலத்தைக் கடத்தி சர்வ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் அமைச்சர்களை ஜனாதிபதி இன்று சந்திப்பு

பொதுக் கட்டமைப்புத் தொடர பாக முஸ்லிம் அமைச்சர்கள் இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கவுள்ளனர். ஜனாதிபதி மாளிகையில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள இச்சந்திப்பில், அரசாங்கத்துடன் இணைந்து கைச்சாத்திடப்பட்டிருக்கும் உடன்படிக்கையில் திருத்தங்களைச் செய்தல், பிரதேச மற்றும் மாவட்டக் குழுக்களின் அதிகாரங்களைத் தெளிவுபடுத்தல் ஆகியன தொடர்பான யோசனைகள் கடந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாகவும்,

## இராணுவச் சிப்பாய் நேற்றுச் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை சீனன்குடாவில் இராணுவ வீரர் ஒருவர் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை ப்ரெட்ரிக் கோட்டையினுள் அமைந்துள்ளது கஜபாகுப் படைப்பிரிவு. இப் படைப் பிரிவின் பாண்ட் வாத்தியக் குழுவைச் சேர்ந்த சுஜித பிரசன்னா என்பவரே இனந்தெரியாத நபர்களால் சீனன்குடாப் பகுதியில் தனியகம என்ற இடத்தில்

## இராணுவத்திற்கு எதிராக குருநகரில் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலுக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தவேளை இராணுவச் சோதனைச் சாவடியில் மின்சாரம் தாக்கி இளைஞர் மரணமான சம்பவத்தைக் கண்டித்து இராணுவத்திற்கு எதிராக நேற்று குருநகரில் மறியல் போராட்டம் நடைபெற்றுள்ளது.

நேற்றுக் காலை குருநகர் இராணுவச் சோதனைச் சாவடிக்கு முன்னால் மக்கள் ரயர் போட்டு எரித்ததுடன் வீதிகளில் தடைகளைப் போட்டு மறியலில் ஈடுபட்டனர்.

குருநகர் இறங்குதுறைக்குச் செல்லும் பிரதான வாயிலும மறிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி நிவாரணம் குறித்து அரசு - புலிகள் 24 இல் பேச்சு?

### இந்திய இணையத்தளம் தகவல்

(புதுடில்லி)

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவிகளை கூட்டாக விநியோகம் செய்வது குறித்து இலங் முன்னதாக நிதியுதவி பெறுவது குறித்து உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் விடுதலைப்

இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கவுள்ளனர். ஜனாதிபதி மாளிகையில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள இச்சந்திப்பில், அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அந்தஸ்து அற்ற அமைச்சர்களான நஜீப் எம்.மஜீத், றிசாட் பதியுதீன், அமீர்அலி ஆகியோரும், பிரதி அமைச்சர் உசைன் பைலாவும் கலந்துகொள் கொள்ளக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டக் குழுக்களின் அதிகாரங்களைத் தெளிவுபடுத்தல் ஆகியன தொடர்பான யோசனைகள் கடந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாகவும்,

இந்த யோசனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் ஆராய்ந்துவிட்டு பதிலளிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே இச்சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-4)

ளது கஜபாகுப் படைப்பிரிவு. இப்படைப் பிரிவின் பாண்ட் வாத்தியக் குழுவைச் சேர்ந்த சுஜித பிரசன்னா என்பவரே இனந்தெரியாத நபர்களால் சீனன்குடாப் பகுதியில் தனியகம என்ற இடத்தில் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டார். நிகழ்ச்சி ஒன்றில் கலந்துவிட்டு திரும்பும்போதே இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச-08)

## இந்திய இணையத்தளம் தகவல்

(புதுடில்லி)

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவிகளை கூட்டாக விநியோகம் செய்வது குறித்து இலங்கையரசும், விடுதலைப் புலிகளும் இம்மாதம் 24 ஆம் திகதி பேச்சு நடாத்தத் திட்டமிட்டிருப்பதாக இந்திய இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக நிதியுதவி பெறுவது குறித்து உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் விடுதலைப் புலிகள் பேச்சு நடாத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்த வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரிவரும் இத்தருணத்தில், விடு

*(12 ஆம் பக்கம் பார்க்க)*

## கரும்புலிகள் நினைவாக இன்று இறுவெட்டு வெளியீடு

(கிளிநொச்சி)

கரும்புலிகள் நினைவான இரண்டு பாடல் இறுவெட்டுக்களும், உயிராயுதம் விபரணச் சித்திரமும் இன்று வெளியிடப்படவுள்ளது.

யாழ். ரமணனின் இசையில், கரும்புலிகளின் உணர்வைத் தாங்கி வரும் தேசத்தின் புயல்கள் (பாகம் - 4) இசைப்பிரியனின் இசையில் உருவாகிய கடற்கரும்புலிகள் (பாகம் 9) ஆகிய பாடல் இறுவெட்டுக்களும், நிதர்சனம் மகளிர்பிரிவில் உருவாக்கமான உயிராயுதம் (பாகம் 4), வீடியோ விபரணச் சித்திரமும் இன்று வெளியிடப்படவுள்ளது. (ச)

## நீதிபதி அம்பேபிட்டியவின் கொலைவழக்கு குற்றவாளிகள் ஐவருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

கொழும்பில் கடந்த வருடம் சுட்டுக்கொல்லப்பட்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பே பிட்டியவின் கொலையுடன் தொடர்புடைய ஐந்து குற்றவாளிகளுக்கு கொழும்பு மேல் நீதி மன்றம் நேற்று மரண தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் கொண்ட குழு முன்னிலையில் நடைபெற்ற வழக்கின் தீர்ப்பு நேற்று வாசிக்கப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதிகளின் தலைவர் உபாலி அபயரட்ன தீர்ப்பினை வழங்கினார். இவ் வழக்கை யூரி சபை இல்லாமல் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட குழு முன்னிலையில் மட்டும் விசாரணையை நடத்துவதற்கு சட்டமா அதிபரின் வேண்டுகோளின் பேரில் பிரதம நீதியரசர் அனுமதி வழங்கியிருந்தார்.

நீதிபதிகளான உபாலி அபயரட்ன, ஜெயம் அபயரட்ன, டபிள்யூ ரட்னாயக்க ஆகிய மூன்று நீதிபதிகளினாலும் இவ் வழக்கும் தொடர்பான விசாரணைகள் நடை

*(12 ஆம் பக்கம் பார்க்க)*






## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொதுக்கட்டமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்த அரசு முயற்சி

## தேரர்களின் மன்றம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தியதன் மூலம் நாட்டை இரண்டாகப் பிரிக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் முயன்றுவருவதாக தேரர்களின் மன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்ட பிக்குகள் அனைவரையும் அரசு அடக்கிவிட்டதாக மன்றத்தின் தேசிய அமைப்பாளர் கொலன்ன சிறிசாந்த விஜய தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்புச் சட்டத்தினால் நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்த ஜனாதிபதியின் அதிகார அமைச்சர் ஒருவர் ஒப்பமிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இச் செயற்பாடு பயங்கரவாத செயற்பாடாகவே உள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த பிக்குகளைக் கட்டுப்படுத்திய அரசாங்கம் இன்று மகா சங்க சபையினரைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றது.

அரச பயங்கரவாதத்தினால் இந்த நாட்டின் மகா சங்கத்தினரையோ, இந்த நாட்டின் பொது மக்கள் உட்பட தேசாபிமானம் உள்ளவர்களையோ கட்டுப்படுத்த தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தினால் முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

# குறுகிய அரசியல் இலாபங்களுக்காகவே பொதுக்கட்டமைப்பை எதிர்க்கின்றனர்

## நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன

(கொழும்பு)

சுனாமி நிவாரண நடவடிக்கைக்கான பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் குறுகிய அரசியல் இலாப நோக்கங்களைக் கருத்தில் கொண்டே அவ்வாறு செயற்படுகின்றனர் என நீதியமைச்சர் ஜோன செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

குருவிட்ட சிறைச்சாலையில் புதிய வைத்தியசாலை ஒன்றைத் திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

குவிட்ட நீதிமன்றத்தில் கைதிகளைப் பதிவு செய்வதற்கான மத்திய நிலையம் ஒன்றிற்கும் முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றிற்குமான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந் நிகழவில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பு எனும் சுனாமி நிவாரண சபைக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் தமது குறுகிய அரசியல் இலாபங்களைக் கருத்தி கொண்டே செயற்படுவதாகத் தெரிவித்துள்ளார். (ற-2)

# பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய சிறிய பண்ணைகள் அபிவிருத்தி

(கொழும்பு)

பால் உற்பத்தியை அதிகரிக்கும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் சிறிய அளவிலான பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் தேசிய பால் பண்ணை உற்பத்தியைத் தக்க வைத்துக் கொள்ள சிறிய அளவிலான பண்ணையாளர்கள் முயன்று வருவதை கால்நடை அபிவிருத்தி அமைச்சு பாராட்டியுள்ளது.

இவர்களின் தேசிய வருமானத்தைக் குறைந்தளவிலாவது உறுதிப்படுத்திக் கொள்ள அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிய அளவிலான பாற்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் வருடம் ஒன்றுக்கு 159 மில்லியன் லீற்றர் பாலைப் பெற்றுக் கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்திறாக 50 ஆயிரம் விவசாயிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (ற-2)

## அலங்காரத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கிழக்கு 1 ஆம வட்டாரம் ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத்திரு விழா கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சாந்தி வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பகல் 108 சங்காபிஷேகதது டன் அன்னதானமும் இடம்பெற்று திருவிழா நிறைவு பெறவுள்ளது. அன்று இந்துகலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட எழுந்தருளி வைரவர் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சிறுவிளம்பரம்


**மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை**
(9567)

**வெளிவந்துவிட்டது**

க.பொ.த. உயர்தரப் புவியியல் மாணவர்களுக்கான சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும் ஆசிரியர் கணேசபிள்ளை சிவகரன் (B.A.Hons DiplnEd) எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். (9720)


## வீதி துப்புரவு

இணுவில், மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய இடங்களில் காங்கேசன்துறை வீதியினஅருகாமையில் உள்ள பற்றைகள வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(அ-122)

# நெடுந்தூர பஸ் ஊழியர் பதிவு

நெடுந்தூர சேவைகளை நடத்தும் பஸ்வண்டிகளின் சாரதிகளையும் நடத்துநர்களையும் பதிவுசெய்யும் நடைமுறை அமுலுக்கு வருகின்றது.

இவர்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலோ பொலிஸ் அத்தியேட்சகரிடத்திலோ தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு பதிவு செய்துகொள்ளும் போது வழங்கப்படும் சான்றிதழைத் தம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# இராசிபலன்

**05.07.2005**
**(ஆனி 21, செவ்வாய்க்கிழமை)**
**சதுர்தசி பிற்பகல் 4.20 மணிவரை**
**மிருகசீரிடம் பிற்பகல் 2.57 மணிவரை**
**இராகுகாலம் 2.57 - 4.27 மணிவரை**
**சுபநேரம் 10.27 - 11.57 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த கருமங்கள் கைகூடும், உறவினர் உதவி, போசனநன்மை, நல்லசெய்தி. |
| இடபம் | கௌரவக்குறைவு, பொருள்விரயம், காரியஇடையூறு, வீண்பகை. |
| மிதுனம் | ஆழ்ந்தசிந்தை, நல்லமுயற்சி, நண்பர்கள் உதவி, சயனசுகம். |
| கடகம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படுதல், சுபசெலவு, காரியதாமதம். |
| சிங்கம் | தொழில்சிந்தை, கலந்துரையாடல், முயற்சி கைகூடும், புதியபொருள் சேர்க்கை. |
| கன்னி | சுபநிகழ்ச்சி, கடின முயற்சி, பிறர் உதவி, புதிய தகவல். |
| துலாம் | ஆன்றோர் மதிப்பு, உடல்உழைப்பு, வீண்பயம், புதிய திட்டமிடல். |
| விருச்சிகம் | வீண்தொல்லை, காரிய இடையூறு, ஆரோக்கியக்குறைவு, வாகனபயம். |
| தனுசு | அபூர்வசந்திப்பு, பணவருவாய், களஸ்திர நன்மை, திடீர் பயணம். |
| மகரம் | சுகவாழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், உற்சாகம், பணவருவாய். |
| கும்பம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, குடும்பக் கவலை, பணவிரயம். |
| மீனம் | பயந்த சுபாவம், ரோகநிலை, முயற்சி தாமதம், சுபசெலவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 25 ஆம் திகதி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்பள்ளி கல்வி இயக்குநர் எஸ்.ஜெயராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சமாதான மையத்தின் ஆலோசகர் அல்போண்ஸ் சபரம் வண பிதா எல்.ஜே.செல்வராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ் விழாவின் தொடக்குனராக இ.தமிழ்இனியனும், பிரதம தீர்ப்பாளராக கப்ரின் டி.எம்.குணசிங்கமும் உதவித் தீர்ப்பாளராக செல்வி கே.றெமின்ராவும் கடமையாற்றினார்கள். (அ-110)

# நீர்த்தாங்கி அமைக்க காணி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலைக்கு நீர்த்தாங்கி ஒன்றை அமைப்பதற்கான காணியை பாடசாலையின் பழைய மாணவியான திருமதி.நாகராசா நந்தினி அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இக் காணியில் யுனிசெவ் நிறுவனத்தால் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் நீர்த்தாங்கி ஒன்று மாணவரின் தேவைக்காக அமைக்கப்பட்டு வருகின்றது. (ற)

# புதிய கட்டடத்தில் வைத்தியசாலை

(சுதுமலை)

நல்லூர் பிரதேசசபையின் நிர்வாகத்தின்கீழ் கொக்குவில் மேற்கில் இயங்கிவந்த ஆயுள்வேத வைத்தியசாலை கடந்த வெள்ளிக் கிழமை ஆனைக்கோட்டை - குளப பிட்டி வீதியில் உள்ள சுப்பிரமணியம் மாலதி கிராம முன்னேற்றச் சங்க வாசிகசாலையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கொக்குவில் மேற்கில் கேணி யடிப்பகுதியில் இரு தினங்களும் அரசடியில் 3 தினங்களும் பல்வேறு வசதியினங்களிற்கு மத்தியில் தனியார் வீடுகளிலே இயங்கி வந்த மேற்படி ஆயுள்வேத வைத்தியசாலை சனசமூக நிலைய பிரதி நிதிகள், பிரதேசசபை அதிகாரிகள் எடுத்த முயற்சியின் பலனாக இப்புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் ஒரு வாரத்தில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுவரு வது குறிப்பிடத்தக்கது. (து-252)

# கர்ப்பிணிகளுக்கு உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கு சவூதி அரேபியாவில் இயங்கும் சர்வதேச இஸ்லாமிய நிவாரண இயக்கம் உதவிகளை வழங்கி வருகிறது.

இதன் ஒரு அங்கமாக இலவச மருத்துவ முகாம்களை நடத்தி வருவதுடன் பால் உணவையும் இந்த அமைப்பு வழங்கி வருகின்றது.

கர்ப்பிணித் தாய்மார் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1000 பெறுமதியான மருந்துப் பொருட்கள் மற்றும் பால் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 500 கர்ப்பிணித் தாய்மார் முதற்கட்டமாகப் பயன்பெற்றுள்ளனர். (ற-2)

# யாழ்.நகரில் களைகட்டியுள்ள அன்னாசிப்பழ வியாபாரம்





தென்னிலங்கை வியாபாரிகளால் எடுத்துவரப்படும் அன்னாசிப்பழங்கள் யாழ்.குடாநாட்டில் அமோகமாக விற்பனையாகி வருகின்றன.

யாழ்.நகரில் தற்போது அன்னாசிப்பழங்கள் தலா ரூபா 15, ரூபா 20, ரூபா 30 போன்ற பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. யாழ்.நகரில் நேற்றுக் கிளிக் செய்யப்பட்ட காட்சி. (படங்கள்:-ஞா.ஐங்கரன்)



# இணுவில் கந்தசுவாமி கோயில்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் 05.07.2005





## இணுவையூர் சிறப்புறுகின்றது

"ஷ்கந்தஸ்ய கீரத்திம் அதுலாம் கல'கல்மஸ நாஸிகம் " என்பது வடமொழி ஸ்காந்தம். கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் கந்தவேல் பெருமானே. மருவுடையார்கள் மனதில் விளையாடும் கந்தவேளே கலியுகத்திலே வரும கவலைகள், துன்பங்கள், பிணிகள் யாவற்றையும் போக்கியருள்பவர்.

இன்றைய தினம் எமது இணுவில் பெருங்கோயிலிலே தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. இறைவன் தேரேறி விழாக் கொள்வதெல்லாம் துஸ்ட நிக்கிரக சிஸ்டபரிபாலன நோக்கினாலேயாம்.

ஆறுமுகங் கொண்டு ஆன்மகோடிகளுக்கு ஆறுதலைத் தருவதறகாகத் தேரேறி வருங் கோலங்கண்டு போற்றித்துதித்து உய்தியடைவீர்களாக.

*'ஸர்வே ஜநாதா சுகிநோ பவந்து'*

**சிவஹ்ரீ இராமநாத ஸ்கந்தராஜா குருக்கள்,**
**பிரதம குருக்கள், மகோற்சவகுரு.**
**சிவஹ்ரீ. உருத்திர அபராஜீதக்குருக்கள்**
**பிரதம குருக்கள், பரம்பரை பூசகர்கள்,**
**இணுவில் கந்தசுவாமி கோயில.**

## நல்வாழ்த்துக்கள்

கலைகளும், கல்வியும், சைவப் பாரம்பரியங்களும், நல்விருந்தோம்பலும் நிரம்பிய இணுவையம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானது தேர்த் திருவிழா வரலாற்றுச் சிறப்புவாய்ந்தது. எமது பாரம்பரியங்களை நினைவுகூரவும், எதிர் காலத் தலைமுறையினருக்குக் கையளிக்கவும் வல்ல விழாவாக தேர்த்திருவிழா அமைவதோடு மட்டுமன்றி, உலகெங்கும் பரந்து வாழும் இவ்வூர் மக்கள் தமது தாயக நினைவுகளை இங்கிதமாக மீட்டெடுக்கவும் வல்ல பெருவிழாவாக அமையும் வேளையில் எம்பெருமானது அருட் கோலமும அருளாசியும் நிறைந்து பொலிக.

**கலாநிதி சபா. ஜெயராசா**
**கல்வியியற் பேராசிரியர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரனத் துலஜம்
வாழ்க வாழ்க எம் வறுமைகள் நீங்க.

## நல்லாசிகள்

இணுவையம்பதியில் நடுநாயகமாக கோயில கொண்டு எழுந்தருளியிருக்கும் காஞ்சியம்பதி, நொச்யொல்லை முருகன், கவியாண வேலவர் என அழைக கப்படும இணுவை கந்தனுக்கு இன்று காலை தேர்த் திருவிழா நடைபெறுகின்றது.

சித்திர வேலைப்பாடுகள் அமைந்த திருவூர் திருக்கோயில் சண்முகப்பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராக வலம் வரும் காட்சி கண்கொள்ளாக காட்சியாகும்.

இன்றைய நன்நாளில் சிறப்பு மலரை வெளியிட அருள்பாலித்த வர்த்தக நிலையங்களுக்கும், வலம்புா பத்திரிகை வெளியீட்டாளர்களுக்கும் கந்தப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள்**
**இணுவில் கந்தசுவாமி கோயில்.**

## தேரேறி நல்ல வரம் தா முருகா

இணுவையில் குடி கொண்ட எங்கள் முருகா
இந்த வையகத்தின் குறைகளை தீர்ப்பாய் முருகா
நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க
அருளவாய் முருகா
எமக்கு அமைதியும செல்வங்களும்
தந தருள்வாய் முருகா
நாள்தோறும் உனை வணங்குகின்றோம் முருகா
இன்று தேரேறி வந்து நல்ல வரம் தந தருள்வாய் முருகா

**பத்திரிகையாளர்,**
**இணுவையூர் செந்தமிழன.**

**மலரமைப்பு: திருக்குமார் சருபன்**
**இணுவில் செய்தியாளர்.**

## விழா சிறப்புற வாழ்த்துவோர்:


College of Computer
கணனியியல் கல்லூரி
Institute of Computer Studies Inuvil
K.K.S Road, Inuvil.
No: 88 Palaly Road. Thirunelvely.
T.P: 222 7643
E.Mail : coc_inuvil@yahoo.com

கணேசன் சென்ரர்
கே.கே.எஸ் வீதி, இணுவில். (ஆஸ்பத்திரி முன்பாக)
பட்டுப் புடவைகள், அன்பளிப்புப் பொருட்கள்
போன்றவற்றின் காட்சி அறை
கணேசன் சென்ரர்
T.P: 021 222 5708

மாணவர்களின் கல்விச் சேவையில்
25 வருடங்களுக்கு மேலான சேவையில்
இணுவில்
A.T.C
கல்வி நிலையம்
இணுவில்.

RASAM
RICE MILL
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா ஜீவாகாரம்
அண்ணா தொழிலகம்
இணுவில்.

K.R.S
உணவு உற்பத்தி பொருட்கள்
K.R.S.FOOD
PRODACTS
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
T.P: 021 4591537

கஜசங்கவி
சென்ரர் அன்ட் பிறின்டேர்ஸ்
(திருமண, பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் விழா, திறப்பு விழா போன்ற அழைப்பிதழ்களின் தாயகம் )
கஜசங்கவ
இல:237 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 7885

சாந்தி புடவை அகம்
SANTHI TEXTILES
சுபமுகூர்த்தப் பட்டுப்
புடவைகளின் காட்சி அறை
இல:157, 158 நவீன சந்தை,
மன்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 2045
கிளை: கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
T.P.021 222 7787

# இன்று ஒரு தகவல்

## தனக்காக வாழ்க

'இதோ இருக்கிறாரே சார்! இவர் மற்றவர்களுக்காக தன்னையே தியாகம் செய்யத்தயாராக இருக்கிறார்" என்று யாராவது சொன்னால் அது ஏமாற்று வேலை என்கிறார் ஒரு பெரியவர். உங்களை நீங்கள் முதலில் கவனியுங்கள் சார். தனக்காக சேவை செய்துகொள்வது தான் உலக இயல்பு "இன்னொருவருக்கு சேவை செய்வதே நோக்கம்" என்று யாரும் இயங்க முடியாதாம். இதுவரை எந்த மனிதனுமே தனக்கென்று வாழாமல் இருந்ததில்லையாம்.

தனக்காக வாழ்வதில் இரண்டு வகை உண்டாம். ஒரு வகை எப்படியென்றால் தன்னுடைய நலனுக்காக மற்றவர்கள் நலனை அழிப்பது தவிர்க்க முடியாமல் போவது. இன்னொரு வகை எப்படியென்றால் தனக்காக வாழ்வதில் மற்றவர்களுக்கும் பல நல்ல பயன்கள் ஏற்படலாம். இந்த இரண்டாவது வகையில் தனது நலன்களை பாதுகாத்து வளர்ச்சியடைவதுதான் நல்லது. தனக்காக வாழ்வது என்பது மனித இயற்கை. இப்படி சொல்வது தவறாகத் தெரியலாம். பண்பாடு அற்றதாகவும் தோன்றலாம். ஆனால் உண்மை அதுதான். இதற்கு ஒரு உதாரணமும் சொல்கிறார் அவர்.

ஓடுகின்ற வெள்ளத்தில் ஒருவன் விழுந்துவிட்டான். சார். அவனைக் காப்பாற்றுவதற்காக ஓடுகின்ற அடுத்தவன் கூட அடிப்படையில் பார்த்தால் தனக்கே ஒரு சேவையைத்தான் செய்து கொள்கிறான் எப்படி தெரியுமா? அவன் தண்ணீரில் விழுந்தவுடன் இவன் மனதில் ஒரு துன்பம் ஒரு கஸ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் துன்பத்தை போக்கிக் கொள்வ்தற்காகவே இவனும் வெள்ளத்தில் குதிக்கிறான். அடுத்தவனைக் காப்பாற்றுகிறான்.

சமூக அமைப்பே நாம் யாரையும் யாருக்காகவும் தியாகம் செய்யச் சொல்லத் தேவையில்லாத தன்மையில் இருக்க வேண்டும். தன்னுடைய வாழ்க்கையை நடத்துவற்குத்தான் ஒவ்வொரு மனிதனும் பிறக்கிறான். அப்படிப் பிறக்கும் மனிதன் தன்னுடைய நன்மையான செயற்பாடுகளில் ஈடுபடுவது நல்லதுதான். அது ஒன்றும் பாவமில்லை.

இப்படி இருக்கும் போது தனக்காக வாழும்படியாரும் போதனை செய்வதில்லை. 'நீ இந்த சமுதாயத்திற்காக வாழ். மனித குலத்திற்காகவாழ்' இப்படியெல்லாம் சொல்லி போதனை செய்வதனால் போலித்தன்மை தர்ன் ஏற்படுகிறது என்கிறார் அவர். தனக்காக வாழ்தலே கொஞ்சம் ஆழமான நிலையில் மற்றவர்களுக்கும் சேவை செய்வதாக ஆகலாம்.

இன்னொருவிஷயம் மற்றவர்களைப் பார்த்துவிட்டு அவர்களை மாதிரி ஆக வேண்டும் என்று முயற்சி செய்யக்கூடாது.மற்றவர்கள் மாதிரி ஆகும் முயற்சியில் உங்களை நீங்கள் இழந்துவிடுவீர்கள். இதனால் நீங்கள் தானாக அடையக் கூடியவளர்ச்சியை அடையாமல் தவறவிட்டு விடுவீர்கள். நீங்கள் எந்த அளவுக்கு முன்னேற முடியுமோ அதை முழுமையாக அடைவதுதான் உண்மையான இலட்சியமாக இருக்கவேண்டும்.

இதெல்லாம் ஒரு பெரியவருடைய சிந்தனைகள். இதைக் கேட்டதும் எல்லோரும் சுயநலவாதியாக மாறுங்கள் என்று கூறுவதாக நினைத்து விடக்கூடாது. சுயநலம் என்ற வார்த்தைக்கு இப்போது நாம் வைத்திருக்கும் அர்த்தம் வேறு.

ஒரு பெரியபங்களா! அதற்கு முன்பாக ஒருவன் பெரிய மியூசிக் பார்ட்டியோடு நின்று கொண்டு **Happy Birthday to you**! என்று பாடிக்கொண்டிருந்தான். "யாருக்காக இப்படி இங்கே நின்று கொண்டு பிறந்தநாள் வாழ்த்து பாடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அந்த வழியாக வந்த ஒரு வெளியூர் ஆள். "இந்த பங்களாவின் உரிமையாளருக்கு இன்று பிறந்த நாள். அதற்காகத் தான் இப்படிச் செய்கிறேன்" என்றான் அந்த ஆள்.

என்ன இது ?அந்த பெரிய மனிதனுக்கு கொஞ்சம் கூட மரியாதையே தெரியவில்லை நீங்கள் இவ்வளவு ஆர்வமாக இங்கே வாழ்த்துப்பாடுகிறீர்கள் அந்த ஆள் ஜன்னலையாவது திறந்து இதைப் பார்த்து ரசிக்க வேண்டாமா?" என்றான் வெளியூர் ஆள். இதற்கு அந்த ஆள் விபரம் தெரியாமல் பேசாதே! நானே இரண்டு இடத்தில் எப்படி இருக்க முடியும்? நான் தானே அந்த பெரிய மனிதன் என்றான். தனக்காக வாழ்வதில் இது ஒரு தனிரகம்.

தென்க்ச்சீ கோ. சுவாமிநாதன்

---

### பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாவிடின்

# சர்வதேச உதவிகள் அனைத்தும் நேரடியாகவே புலிகளுக்குக் கிடைத்திருக்கும் -டி.யூ.குணசேகர

(கொழும்பு)

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் படாவிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வ தேச உதவிகள் நேரடியாகக்கிடைத்திருக்குமென ஸ்ரீலங்கா கம்யூனிஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

சர்வதேச உதவிகள் இவ்வாறு கிடைக்குமென்பதினாலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பை விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து நிறுவினார் என்றும் மாத்தறையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் 6ஆறாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு நாட்டினதும் இனப்பிரச்சினை இராணுவ நடவடிக்கையூடாக தீர்க்கப்பட்டதாக வரலாறு இல்லை. அதேபோல் இலங்கை இனப்பிரச்சினையும் இராணுவ ரீதியாகத் தீர்க்கப்படமுடியாத ஒரு பிரச்சினையாகவே உள்ளது.

நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து இருககும் வரை அரசின் நிலைத்த தன்மை மற்றும் இனவாத செயற்பாடுகள் குறித்து யாரும் பீதியடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார். (ற-8)

# சர்வதேசத்தின் நிவாரண நிதிகள் மாயமானதன் காரணம் என்ன?

## அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்கிறார் ரணில்

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி பயன்படுத்தப்பட்ட



விதம் குறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நிதி குறித்து மக்கள் கேள்வி எழுப்புவதாகவும் எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மக்கள் சக்தி நடவடிக்கையின் இரண்டாவது பேரணியில் கலந்கோண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமி நிவாரணம் ஏன் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். வீடுகள் ஏன் அமைக்கப்படவில்லை? ஏன் அரசு ஒருசதமேனும் செலவு செய்யவில்லை? எனவும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம்தான் பாதிக்கபட்ட மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப் படுகின்றன. நிவாரண நிதிக்கு என்ன நடந்தது?

தமக்கு கிடைக்காத இந்த நிதி யாருடைய பொக்கற்றுக்களுக்கு சென்றது. இதனைக் களவாடியது யார்? என்று மக்கள் கேட்கின்றனர்.

டிசம்பர் 27ஆம் திகதியிலிருந்து அரசாங்கத்துக்குக் கிடைத்த பெருமளவு நிவாரண நிதி எங்கே போனது? என்பது பற்றி அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இது குறித்து அரசு உண்மை நிலையைக் கூற வேண்டும். அப்போது யார் யார் களவாளிகள் என்று தெரியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் தெரிவித்தார். (ற-8)

### மலையக ரயில் சேவை

# சில தினங்களுக்கு மட்டுப்படுத்தப்படும்

(கொழும்பு)

மலையக ரயில் சேவையை சில தினங்களுக்கு மட்டுப்படுத்த நேரிடும் என ரயில்வே பொது முகாமையாளர் பிறியால் டி.சில்வா தெரிவித்துள்ளார்.

மலையக ரயில் பாதையின் பல இடங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளைக்கும் பதுளைக்கும் இடையிலான ரயில்பாதை பேராதனைக்கும் றம்புக்கணைக்கும் இடையிலான ரயில்பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்துப் பயணிகள் பாதுகாப்புக் கருதி இந்தப் பகுதிக்ளுக்கான ரயில் சேவையை சில தினங்களுக்கு மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பிறியால் டி.சில்வா கூறியுள்ளார்.

சேதமடைந்த ரயில் பாதை தொடர்பான விபர அறிக்கை ஒன்று ரயில்வே பொதுமுகாமையாளரிடம் கோரப்பட்டுள்ளதாக,இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எஸ்.ஜெயவீர தெரிவித்தார்.

அறிக்கை கிடைத்த பின்னர் ரயில் பாதையைத் திருத்துதல் அல்லது மாற்று வழிகளை நடைமுறைப்படுத்துதல் என்பன குறித்துக் கவனம் செலுத்தப்படும் எனவும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மேலும் கூறியுள்ளார். (ற-2)

## தீவகத்தில் கரும்புலிகள் தினத்தை சிறப்பாக நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

'கரும்புலிகள்' அது தமிழனது வாழ்வில் உயிர்ப்புடைய பெரும் சக்தி. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் உன்னத போராயுதமாகிய கரும்புலிகளது தற்கொடையை நினைவுறுத்தும் நாளை தீவகக் கோட்டத்தில் சிறப்புற நடாத்த தீவகக்கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

இன்று செவ்வாய்கிழமை மாலை6.30மணிக்கு புளியங்கூடல் முத்துமாரியம்பாள் ஆலய முன்றலில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் தொடங்கும்.விசேடமாக அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவுப்பந்தலில் சுடரேற்றி மலரஞ்சலி இடம்பெறும்.தொடர்ந்து நினைவுப் பொதுக் கூட்டம்,சிறப்புரைகள்,கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, தீவகத்தின பல பகுதிகளிலும் நினைவுப் பந்தல் அமைத்தும் வாழை,தோரணம் கட்டியும் பதாதைகள் கட்டி,கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும் வருகின்றன.

தீவகத்தில் உணர்வெழுச்சியுடன் நிகழ்வுகள் நடைபெற அனைத்து ஏற்பாடும் ஊரக, பிரதேச,தேசிய எழுச்சிப் பேரவையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)

## புதியநோயை உண்டாக்கும் பூச்சி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வயிற்றுக்கோளாறை ஏற்படுத்தி ஒருவகை நோயை உண்டு பண்ணும் பூச்சி பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. சம்மாந்துறையில் இந்தப் பூச்சியின் தாக்கத்துக்கு உள்ளான ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சிறுவர் மருத்துவ ஆலோசகர் டாக்டர் பைஸ், இந்நோய் நன்கு சமைக்கப்படாத மாட்டிறைச்சியிலிருந்து உற்பத்தியாகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இது தொடர்பாக கல்முனை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆய்வுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன எனவும், மலசலகூட வசதிகள் இன்றி திறந்த வெளியில் மலம் கழிப்பதே இந்நோய் பரவ இன்னுமொருகாரணமாகும் எனவும் கூறியுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் தகுந்த மலசலகூட வசதி இன்றி இருப்பதே இந்நோய் மேலும் பரவக்காரணமாக அமையலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு,உடைகள் முறையாகக் கேளுங்கள் கொடுக்கப்படும்

### சமூக சேவைகள் பிரதி அமைச்சர்

(கொழும்பு)

கடல் பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்று இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு மற்றும் உடைத் தட்டுப்பாடுகள் இருப்பின் அவை பற்றி உடனடியாக அறிவிக்கும்படி சமூகசேவைகள் பிரதியமைச்சர் கேட்டுள்ளார்.

உருகொடவத்தை மற்றும் துறைமுகக் களஞ்சியங்களில் தேவையான அளவு உணவு மற்றும் உடைகள் இருப்பதாக பிரதியமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், அவற்றை வடக்கு - கிழக்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

தேவையற்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபடாமல் முறையாக சமூகசேவை அமைச்சுக்கு தமது குறைபாடுகளை அறிவிப்பதன் மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (ற-2)

## வட-கிழக்கில் வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம் பெயர்ந்தவர்களுக்கென வீடமைப்புத்திட்டங்கள் பலவற்றை ஆரம்பிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி யாழ்ப்பாண்ம், மட்டக்களப்பு ,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்த வீடமைப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.கேவகே தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களுக்கே இந்த வீடமைப்புத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக முல்லைத்தீவு நகரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக ஆரம்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி நகரின் நிர்மாண நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(ற-9)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

## கேட்டானே ஒரு கேள்வி போட்டானே ஒரு போடு

என் . விஜயன்

**29** அந்த நிறுவனம் தேவையான நபரின் வீட்டிற்குக் காரை அனுப்பிக் கொள்ளும்.

நாம் பயணித்த கார்ச் சாரதியிடம் திரு. குமரன் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் அளித்த பதிலில் சுமார் எண்ணூறு (800) கார்கள் தமது நிறுவனத்திடம் இருப்பதாகவும், கார் தேவையென யாரேனும் தகவல் கொடுத்தால், அந்த நபரின் இடத்திற்கு அருகாமையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் காருக்கு ரேடியோ ஹோல் அனுப்பி உரிய இடத்திற்குச் செல்லுமாறு பணிக்கப்படுமெனவும் கூறினார்.

சுருங்கக் கூறின் யாழ்ப்பாணத்தில் தனியார் துறையின் பாதுகாப்பு சேவை (Security Service) போல், தமிழகத்தில் வாடகைக் கார் சேவை நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் பயணத்தூரத்திற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டணம் அறவிடப்படுவதால், ஏமாற்றுவதற்கோ, அதிக கட்டணங்களைச் செலுத்தவோ வேண்டிய தேவை ஏற்படாது.

இதனால் வாடகைக் காருக்கான கேள்வி (Demand) அங்கு அதிகமாகவேயுள்ளது.

### நீங்கள் எந்த அமைப்பு

பூந்தமல்லி ஹைய் றோட்டில் கார் வேகமெடுக்க செய்தியாளர் குமரன் மீண்டும் என்னோடு கதை கொடுத்தார்.

யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்விலை அறிவதில் அவர் காட்டிய அக்கறை எனக்குப் பெருமையாக இருந்தது. ஈழத்தமிழர்கள் சுதந்திரமாக - சமாதானத்துடன் வாழவேண்டும். இதுவே எங்களின் விருப்பம் என்ற அவரின் வார்த்தைகள் இன்னமும் என் இதயத்தின் அறைகளுக்குள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. என்னுடன் அளவளாவிக் கொண்டிருந்த அவர் திடீரென ஒரு கேள்வி கேட்டார். 'நீங்கள் எந்த அமைப்பைச் சேர்ந்திருக்கிறீர்கள்'

அவரின் கேள்வி என்னை மௌனியாக்கியது. கேள்வியின் பொருளைப் புரிந்துகொள்வதில் இருந்த தாமதமே மௌனத்திற்கான காரணமாகும்.

சிலவேளை எந்தப் பத்திரிகை நிறுவனத்தைச் சார்ந்திருக்கிறீர்கள் என்று கேட்கிறாரோ! என்ற சிந்தனை என்னுள் எழுந்தபோதிலும் சீ... கேள்வியைப் புரியாமல் விடை கூறினால் வட்டுக்கோட்டைக்குப் பாதைகேட்ட கதையாகிவிடும் என்பதால், 'நீங்கள் எந்த அமைப்பைக் கேட்கிறீர்கள்' குமரனிடமே வினவினேன்.

எனது கேள்வியை அவர் எவ்வாறு புரிந்துகொண்டாரோ தெரியவில்லை. தனது கேள்வியைத் தெளிவாகக் கேட்டு என்னிடம் பதில் பெறவேண்டுமென்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டார்.

'சார்... யாழ்ப்பாணத்தில பல இயக்கங்கள் இருந்தனவல்லவா? அதில் நீங்கள் எந்த இயக்கம் என்று கேட்கிறேன்' என்றார்.

திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய பொழிப்புரை போல குமரனின் கேள்வி மிகத் தெளிவாக இருந்தது.

கேட்டானே ஒரு கேள்வி போட்டானே ஒரு போடு... என்று பாடவா முடியும். அவரின் கேள்விக்கு மெல்லியதான ஒரு சிரிப்பு.

நான் எந்த இயக்கத்தையும் சாராதவன். என் பதிலை ஆவலோடு எதிர்பார்த்திருந்தவர் போல் அப்படியா!... என்றார்.

அவரின் ஆச்சரியமான வெளிப்பாடு என் பதிலை அவர் ஏற்றுக்கொண்டு விட்டார் என்றே எண்ணினேன்.

ஆனால், அப்படியா! என்று அவர் கூறியது நான் பொய் சொல்வதாக நினைத்தேயென்பதை பின்னைய உரையாடலில் இருந்து உணர்ந்து கொண்டேன்.

ஈழத்தில் ஒரு போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நீங்கள் ஒரு இளைஞனாக இருக்கிறீர்கள். உங்களுக்கும் ஆயுதமேந்திப் போராட வேண்டும் போல் இருக்கவில்லையா?... போராட்டத்தில் ஈடுபடாதது உங்களுக்கு மன உறுத்தலைத் தரவில்லையா?... மிக இறுக்கமான கேள்வியைக் குமரன் கேட்டார்.

ஒரு செய்தியாளரின், நுணுக்கமான கேள்விக்கு நுட்பமான பதிலை வழங்க வேண்டுமென நினைத்தேன்.

மூன்று செய்தி எழுதிவிட்டு நான் பத்திரிகையாளன் என்று மார்தட்டும் யாழ்ப்பாண மண்ணில் இருந்து போனவன் நான். எடுத்ததற்கெல்லாம் பெட்டிஷன் போட்டு, எல்லாவற்றையும் கெடுத்து தம் குடும்பத்திற்கே நாசம் தேடும் நல்ல மனிதர்களோடு கூடியிருந்தவன் நான், விடமுடியுமா என்ன?

குமரன் என்னிடம் கேட்ட கேள்விக்குப் பதிலாக நான் அவரிடம் கேள்வி கேட்டேன்.

சுபாஷ்சந்திரபோஸ் ஆயுதப் போராட்டம் நடத்திய போது பாரத இளைஞர்கள் எல்லோரும் ஆயுதமேந்திப் போராடினார்களா?

அண்ணல் காந்தி உண்ணாவிரதம் இருந்த காலத்தில் இந்திய தேசமே உண்ணாவிரதம் இருந்ததா?

இந்தக் கேள்விகளைக் கேட்டு விட்டு, அவரின் முகத்தைப் பார்த்தேன். அவர் மௌனமாக இருந்தார். (வளரும்)

---

## சுனாமியால் மனோநிலை பாதித்தவர்களுக்கு உளவியல் மாற்றங்களை ஏற்படுத்த பயிற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி பேரலைத்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு, உறவுகளையும், உடைமைகளையும், இழந்தோரின் மனோநிலையில் மாற்றங்களை உண்டுபண்ணும் முகமாகத் துரித நடவடிக்கைகளை அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன.

சுனாமி தாக்கம் ஏற்பட்டு 6 மாதங்கள் பூர்த்தியாகிவிட்ட நிலையிலும், அப்பாதிப்பு ஏற்படுத்திய தாக்கத்திலிருந்துவிடுபடாதவர்களுக்கு உளவியல் மாற்றங்களை உண்டுபண்ண அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று இளைஞர், யுவதிகளுக்கு 3 மாதகால உளவியல் பயிற்சியை வழங்கியுள்ளது.

இப் பயிற்சிகளை முடித்தவர்கள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களிடையே உளவியல் ரீதியான விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

பயிற்சிகளை முடித்துக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ்களும்வழங்கப்படவுள்ளன. (ற-9)

## தனியார் பஸ் மூலம் பாடசாலை சேவை ஆரம்பிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

கொத்தணி பஸ் கம்பனிகளின் தனியார் பஸ்களை பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்கென்று நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்ற பஸ் சேவையை இம்மாதம் ஆரம்பிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 8 பாடசாலைகளில் இதனை செயற்படுத்த இருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாத்தறை, குருநாகல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகள் இதில் உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக 35 பாடசாலைகளுக்கு பஸ் சேவைகளை ஆரம்பிக்கவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை பஸ் சேவைக்காக 150ற்கும் மேற்பட்ட பஸ்களை வழங்க கொத்தணி பஸ் கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-9)

## மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் அரசுடன் இணையும்

### சுதந்திரக் கட்சிச் செயலாளர் நம்பிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் எனத் தற்போது அறிவிப்பது இல்லையென சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருப்பதாகக் கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என அந்தக்கட்சி அறிவிக்கும் என்று தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கருத்து பேதங்களை மறந்து மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் அரசாங்கத்துடன் இணையும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண சபை சம்பந்தமாக பிழையாகப் புரிந்து கொண்டதினால் விலகியிருக்கும் மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் அரசாங்கத்துடன் இணையும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதனால் மக்கள் விடுதலை முன்னணியின் அமைச்சர்கள் பதவிவகித்த அமைச்சுகளுக்கு புதிய அமைசசர்களை அமைப்பது இல்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(அ-9)

## நிவாரண செயற்பாடுகளைக் கண்காணிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு-பிரதமர் யோசனை

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண செயற்பாடுகள் தொடர்பாக கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்கும் யோசனை ஒன்றைப் பிரதமர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண சபை சம்பந்தமாக கட்சிகளும் வெகுஜன அமைப்புக்களும், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருவதாலேயே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற தெரிவுக் குழு யோசனையை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் விளக்கமளித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-9)

## தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று...

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மற்றும் விளையாட்டுத்துறை என்பனவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில், இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5.00 மணிக்கு தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தா அணி மோதவுள்ளது. (ற-7)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஒழுங்குசெய்த விளையாட்டுப் போட்டியை பிரதேசசெயலர் திருமதி. ரூபினி வரதலிங்கம் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைப்பதையும், அருகில் உதவிப் பிரதேச செயலர் எழிலரசி, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன், சிறாப்பர் வேல்ராஜ், கிராமசேவகர் நாகராசா, அலுவலக உத்தியோகத்தர் செ. வைத்தீஸ்வரன் ஆகியோரையும் படத்தில் காண்க.

## அகதி முகாமில் இடம் தேடி

சுனாமி வந்தது
வெள்ளம் வந்தது
க்டல் நீர் வந்தது எம்மைத் தேடி...
பொதிகள் சுமந்து
புறப்பட்டு விட்டோம்
அகதி முகாமில் இடம் தேடி!

ம.கீதா,
யாழ்ப்பாணம்.

## பெருந் துன்பம்

அலை கடலில் துரும்பாய்
அலையுது மானுடம்!
ஆழிப் பேரலையில்
அழிந்தன பல உயிர்கள்!
போரால் வந்த துன்பம்
போதுமென்றே ஆறுமுன்னே...
பேரலையால் வந்ததே
பெருந்துன்பம்! - என்றும்
உயிருக்குப் போராடி
ஊர்ஊராய் திரிவதுதான்
தமிழனின் தலையெழுத்தா....?

S.நித்தயா,
கொக்குவில்.

## இது நியாயமா?

அள்ளி அள்ளித் தந்த கடலம்மா!
நீ கரையோர மக்களுக்குக் கொடுத்தது ~ என்னம்மா
உயிரில்லை உடம்பில்லை
உணர்வில்லை சொத்தில்லை
இருக்க இடமில்லை ~ பாரம்மா!
நீ கொடுத்த பவளங்கள் உன் குதையில்
பாரம்மா கடலம்மா
இது நியாயமா?

R.கருணாநிதி,
ஆனைக்கோட்டை.

## அல்லும் பகலும் அலையும் கடல்

ஆழித்தாயே அலைகடலே
ஊருக்குள்
உனக்கென்ன வேலை?
ஆக்கிரமிப்புக்கும்
முடிவில்லையோ?
ஊராரும் அலைகின்றனரே;
ஒப்பந்த மொன்று
செய்வோமோ?
ஓடி நீயும் திரும்புவையே!

திருமதி உஷா,
கெருடாவில்.

# மௌனத்தின் தேடல்கள் -63



## இயற்கை அன்னையே!

போர் வடுக்கள் காய்ந்து
பொது வாழ்க்கையில் ~ நாம்
நீ பொறுமை காக்காது
சுனாமியாய் எம் குடியை
நாசம் செய்து
ஏழையாக்கியது ஏனோ!

N.நிகா,
இணுவில்.

## அலை கடலே!

எல்லை அறியா அலை கடலே
இரவு உறக்கம் உனக்கில்லையோ
இரவும் பகலும் மக்களை
வெருட்டி ஓடம் ஏற்றினையோ?
வீடும் புகுந்து பார்த்த நீ
தென்னம் சோலையில் அலைவதேன்?
மிச்சம் சொச்சம் உள்ளவற்றை
கொள்ளை அடித்துப் போகவோ?


ரி.ரி.ஜெகநாதன் ஐயர்,
தொண்டைமானாறு.

## காலத்தின் கோலம்

கடலிலே செல்லும்
கட்டு மரம் - இனறு கடற்
கரையிலே செல்லுது!
காலத்தின் கோலமிது
ஞாலத்தின் நிலையிது
கடலிலிருந்து
கரைதேடும் வேலை இனியில்லை
கரையிலிருந்து
கடலைத்தேடும் நிலைதான் இன்று
காலத்தின் கோலமிது
ஞாலத்தின் நிலையிது!

*கி.குகநாதன், பருத்தித்துறை.*

# மௌனத்தின் தேடல்கள் -65



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்தோன்றும்
உள்ளத்து உணர்வுகளை
**மிகச் சிறிய** கவிதை
களாக்கித்
**தபால் அட்டையில்**
வலம்புரி-சங்குநாதத்திற்கு
அனுப்பிவையுங்கள.
***கிடைக்கவேண்டிய***
**இறுதித் திகதி** - 11.07.2005
அனுப்பவேண்டிய முகவரி:-
மௌனத்தின் தேடல்கள் - 65
**வலம்புரி - சங்குநாதம்**
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.




## என்றும் பீனீஸாய்...

உறக்கம் விழிகளில் இல்லை
கனவுகளைத்தான் சுமந்துள்ளோம்
தயக்கம் நெஞ்சினில்லை
தளரா உறுதியைத்தான் சுமந்துள்ளோம்

பிரிவுகள் பிளவுகள் இங்கில்லை
உறவுகளைத்தான வளர்ததுள்ளோம்
சிந்திய குருதிகள் காய்ந்திடவில்லை
நினைவுகளால் ஈரப்படுததிக்கொள்கிறோம்

மாண்ட மாவீரரை மறக்கவில்லை
கல்லறைக் கூண்டுக்குள்
பத்திரப்படுத்திவைத்துள்ளோம்

விடுதலைக்கு விலை கொடுத்த
தியாகங்களின் வரிசையில் ஒரு படி
மேலேதான் சாமாதானத்தின் வாசல் திறப்பு

எம் கையில் கொடுத்த பெரும் பொறுப்பு
தீக்குள் விழுநதாலும்
உயிர்த்தெழும் பீனிஸ்ஸாய்
உலாவிடுவோம் என்றும்....!

M.சந்திரகலா,
யோகபுரம்.

## புரிந்துணர்வுகள்

புரிந்துணர்வில்லா மனிதரை எண்ணி
மனமோ மிக வேதனையில்
புழுவாய் நெளிந்து கொண்டு
அந்த நடு நிசியில்...
தூக்கமோ கண்களை
தழுவுதில்லை....
துயரமாய் நான் மட்டும்....
அம்மாவும தூங்கி விட்டா
அப்பாவும் நல்ல தூக்கம்
ஊரே உறங்கி, உற்றாரும் தூங்கிட்டார்
கவிதையோ என் மனதில்
தூங்காமல் தூங்கி
எழுதுமாறென்னைத் தூண்ட
தனியனாய் உள்ளேன் என்ற
தனிமையோ என்னை வாட்ட
அண்ணார்ந்து பார்த்தேன் வானில்
அழகிய நிலா...
ஆமாம்....!
அதுவும் தூங்கவில்லை
என்னைப் போல்
புரிந்துணர்வில்லா மனிதரை எண்ணியே
அதுவும் முகிலினிடை விழித்தபடி
முழித்திருக்கு!

ஜெ.சுபாஷினி,
நல்லூர்.

## என் உள்ளத்தில்

சிறகடித்துப் பறக்கும் வண்ணப்
பறவை நீ...
கனவில் தினமும உலாவரும்
வண்ண நிலவு நீ...
தூங்கும்போது காதில் ஒலிக்கும்
கொலுசின் ஓசை நீ...
என் இதயத்தினுள் இருந்து பல
குறும்புகள் செய்பவளும் நீ...
அன்புக்குரியவளே...
அமைதியாய் தூங்க என்
உள்ளத்தில வருவாயா...?

வ. பிரகாஷ்,
தொல்புரம்.

## சோதனை



உன் புன்னகை
இலவசமாய் கிடைக்கும்
சந்தோசம் எனக்கு!
சிநேகிதமாய் நிஜத்திலும்
காதலாய் நினைவிலும்
ஊமை விழிகளின்
தொகுப்புரை புரிகின்றதா?
வேதனையும் சாதனையும்
வெட்கப் படுதலுமில்லை
ஆனாலும் என் ஆன்மா
காக்கின்றது அமைதி!

பல தேவதைகளைப் பார்த்தேன்
அவை சம்பவங்கள் தான்
உன்னை முதல் கண்டதும்
அது சோதனையாகிவிட்டது

கோவிலுக்கு வராத தெய்வம்
அரங்கேற்றத்திற்கு வராத சரஸ்வதி
என் எதிரே வந்ததோ?
கண்ணெதிரே தோன்றிய
கலை மகளே!
மீண்டும் உன்தன்
தரிசனம் எப்போது?

ஜோ.ஜெஸ்ரின், கொழும்புத்துறை.

## பேசாத ஆசை

மதிமுகமும் கொடியிடையும்
நீண்ட கூந்தலும் சிவந்த உதடும்
தேன் சிந்தும் சிரிப்பும் கொண்ட
பிரமன் சிரமப்பட்டு வரைந்த
ஓவியமொன்று
பல ஆண்களின்
பெருமூச்சுக்கு மத்திய்ல்
நானிருந்த பேருந்து இருக்கையில்!
பார்த்தேன்; பார்வையானாள்
சிரித்தேன்; சிரிப்பானாள்
தூக்கமும் நினைவும் தொலைந்து
பாதை நீண்டு பயணம் தூரமே
வேண்டுமென்றது இதயம்
பயணிகளின் கற்பனைய்ல்
காதலாகள்தான
இருவரும்
அவளின் அழகிய புன்னகை
அடிக்கடி என்னை
கதைங்களேன், என்பதைப்போல்
கன்னந்தீண்டியது - நானும்
எத்தனை தடவை
எத்தனித்தேன் கதைப்பதற்கு
வார்த்தைகள் தொலைந்து
வாய் ஊமையானது
பயணம் முடியும் வரை
பாஷைகள் மட்டும்
பரிமாறவில்லை
ஏனென்றால் - அவளோ
தமிழ்புரியாச்
சிங்களத்தோழி!

நிதுசி,
அல்வாய்.

# இறப்புலகில் இன்பத்தைக் காண உதவுமா தற்கொலை?

சிறப்புப் பார்வை

பிரச்சினைகள் இடியெனத தலையில் இறங்கும்போது அவற்றை எதிர்கொள்ள வழி தெரியாமல் தற்கொலையை நாடுபவர்கள் பலர் இருக்கிறார்கள். இத்தகையோரின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்துவருவதை அலசுகிறது இந்தச் சிறப்புப் பார்வை. இச்சிறப்புப் பார்வையில் குறிப்பாகத் தமிழகத்தில் நடைபெறும் சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டாலும் அது ஒட்டு மொத்தமாக இலங்கைக்கும் பொருந்தும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

கை நிறையச் சம்பாத்தியம். கௌரவமான குடும்பம. சொந்தமான வீடு. எக்கச்சக்கமான சொத்து. இப்படி மகிழ்சசியாக இருந்த வாசுதேவன் வாழ்விலும் திடீரெனப் புயல் வீசியது. 6 மாதங்களுக்கு முன் உடல்நிலை பாதிக்கப்பட்ட வாசுதேவன் ஒருநாள் அகால முடிவை நாடினான். அழகான இரு குழந்தைகளின் சாப்பாட்டில் விஷம் கலந்துவிட்டு அருமை மனைவியோடு தூக்கிட்டுக்கொண்டார் வாசுதேவன். எல்லோருடனும் அன்போடு பழகி வந்த வாசுதேவன குடும்பம் ஒட்டுமொத்தமாகத் தற்கொலையை நாடியது ஏனென்று எவருககுமே விளங்கவில்லை.

சேலம் மாவட்டம் சர்க்கரையெட்டிப் பட்டியைச் சேர்ந்த கட்டட மேஸ்திரி பெருமாள். 18 வயதிலேயே காதலித்த பெண்ணைக் கைப்பிடித்த பெருமாளுக்கு இரண்டு மகன்கள். ஒரு மகள். வேலை, குடும்பம் என இருந்த பெருமாளுக்கு சொந்தச் சகோதரி வடிவத்



தில பிரச்சினை வந்தது. மனைவியை, குழந்தைகளை விட்டுப் பிரிந்தார். ஒரு கட்டத்தில் மனமுடைந்த பெருமாள் ஓடும் ரயில் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார். இன்று செய்வதறியாது தத்தளிக்கிறது அவரது குடும்பம்.

கழுத்தை நெரிக்கும் கடன், கண்ணீரில் மிதக்கும காதல் தோல்வி, ஆளையே உருக்குலைய வைக்கும். அவமானம். விரக்தியின் விளிம்புககுத் தள்ளப்படும் இத்தகைய நேரங்களில் எடுக்கப்படும் தற கொலை முடிவுகள நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகச் சுட்டிக் காட்டுகின்றன கணக்கெடுப்பு முடிவுகள்.

ஒரு வருடத்தில் நாடு முழுக்க நடக்கும் ஒரு இலட்சம் தற்கொலைகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சம்பவங்கள் தமிழகத்தில் நிகழ்வது கூடுதல் அதிர்ச்சி.

ஒரு வருடத்தில் உலகம் பூராவும் பத்து இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தற்கொலை மூலம் இறந்து போகிறார்கள்.இதற்கு முக்கிய காரணம் குடும்பத்துக்குள் ஏற்படும் பிரச்சினை. குடும்பத்தில் ஏற்படக கூடிய மனவேறுபாடுகள், ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாத தன்மை, 'ஈகோ' பிரச்சினைகள் என்று கூறிக்கொண்டே போகலாம். இவற்றில் முக்கியமானது குடும்பப் பிரச்சினைதான் என்கிறார் மனோதத்துவ நிபுணர் ஒருவர்.

தாமே விரும்பி ஆர அமர யோசித்து தற்கொலைக்கு முடிவு எடுப்பவர்கள் தொகை மிக மிகக் குறைவு. பிரச்சினை வெளிவந்த ஒரு சில நிமிட நேரத்தில் புத்திபேதலித்து எடுக்கப்படும் அவசர முடிவே தற்கொலை என்பது ஆய்வாளர்கள் கருத்து. இதுவும் ஒரு வகை உளவியல் கோளாறுதான் என்று சொல்லும் மருத்துவர்கள், அதனால்தான் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமான ஒரு பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு முடிவைத் தேடுவதாகக கூறுகின்றனர்.

தற்கொலை என்பது ஸ்திரத்தன்மை இல்லாத அந்த நிமிடத்திலேயே எடுக்கப்படும ஒரு முடிவு. யாருக்கும் செத்துப் போக வேண்டுமென்று ஆசை இருப்பதில்லை. என்ன செய்வதென்று தீர்மானிக்க முடியாத நிலையில் அவசர அவசரமாக எடுக்கப்படும முடிவுதான் தற்கொலை. தற்கொலை செய்து கொண்டவர்களின் புள்ளிவிபரங்களை ஆராய்ந்து பார்த்தால் மனநிலைக் கோளாறுதான் காரணமென்பது புலனாகும். மன ஸ்திரத்தன்மை இல்லாததாலும், மன அழுத்தத் தாலும், திடீரென உணர்ச்சிவசப்படுவதனாலும், குடிபோதையிலும் இத்தகைய அவசர முடிவை எடுப்பவர்களும் இருக்கிறார்கள் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

தூக்குப்போட்டு, மாத்திரை சாப்பிட்டு, விஷம் குடித்து என விதவிதமான முறையில் தற்கொலை செய்து கொள்பவர்கள ஒரு பக்கம். வாழ வேண்டாமென முடிவெடுத்து தற்கொலை செய்வதற்காகவே தமிழ் நாட்டில் ஒரு இடத்தைத் தேடிச் செல்பவர்களும் இருக்கிறார்கள். எலும்புக் கூடுகள் நிரம்பிக்கிடக்கும் அந்த இடம்பற்றிய அதிர்சசித் தகவல்கள்; தற்கொலைக்கு தற்போதைய சட்டத்தின் அணுகுமுறை சரியா என்பன ஆய்வுக்குரியது.

பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் பயந்து நடுங்குபவர்களது கடைசி ஆயுதம்தான் தற்கொலை. பல வகையில் ஒரு சில வினாடிகளில் மனம் தடுமாறி மரணத்துக்குள் விழ நினைப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டக் கூடியதாக இருந்த போதிலும் தடுத்து நிறுத்த முடிவதில்லை.

'இருந்தால்தானே பிரச்சினை. ஒரேயடியாகப் போய்விட்டால் எல்லாவற்றிலிருந்தும் தப்பிவிடலாம்' என்று நினைப்பவர்களின் மனதை மாற்ற வழியுண்டா என ஆராய வேண்டும்.

5 பெண் குழந்தைகள். ஆறாவது ஒரு ஆண் பிள்ளை. இவர்களில் திருமண வயதைத் தொட்டு விட்ட பெண்கள் மூன்று பேர். புலம்பித் தவித்த குடியாத்தம் புவனேஸ்வரிப் பேட்டை அம்பலவாணருக்கு வங்கிக் கடன் நெருக்கியது ஒருபக்கம். வாழ வழியே இல்லையென முடிவெடுத்து மனைவி, பிள்ளைகள் ஏழுபேரோடும் பூச்சி கொல்லி மருந்து சாப்பிட்டு குடும்பத்துடன் போய்ச் சேர்ந்தார் அம்பலவாணர்.

அவர்கள் தற்கொலை செய்த கொண்டது அயலவர்களுக்கே தெரியாது. அயலவர்களுடன் நெருங்கிப் பழகும் பழக்கம் வைத்துக் கொள்ளாத அம்பலவாணர் வீடு பூட்டப்பட்டிருப்பதை அயலவர்கள் பொருட்படுத்தவில்லை. எங்காவது அயலூர் போயிருக்கலாம் என எண்ணிவிட்டார்கள். ஒரு தினத்தில் அந்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசத் தொடங்கவே சந்தேகப்பட்டு காவல்துறைக்கு அறிவித்தனர் அயலவர்கள். காவல்துறை வந்து வீட்டை உடைத்துப் பார்த்த போது வரிசையாக அழுகிய நிலையில் ஏழு பிணங்கள்.

நகரிலிருந்து நான்காயிரம் அடி உயரத்தில் இருக்கிறது அந்த இடம். சுற்றிலும் இதயத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கையின் இதமளிக்கும் சூழல் நிலவினாலும் உயிரை விடுவதற்காக இங்கே வருபவர்கள் தொகை ஏராளம். குளுகுளு கொடைக்கானலிலுள்ள இந்தத் தற்கொலைப் பாறைக்குக் கீழே கிடக்கும் எலும்புக் கூடுகளே இதற்குச் சாட்சி. இவற்றுள் வாழ வேண்டிய காதல் ஜோடிகளின எண்ணிக்கைதான் அதிகம் என்பது கூடுதல் அதிர்ச்சி.

1500 அடி பள்ளம். மேலிருந்து விழுந்தால் உயிர் தப்புவதற்கு எந்தவித வழியும் கிடையாது. தப்பவே முடியாது. அதனாலே இங்கே வந்து இறந்தவர்களுடைய எலும்புக் கூடுகள் கீழே குவியல் குவியலாகக் கிடக்கின்றன. இதில் ஊர் பேர் தெரியாதவர்கள் எத்தனை பேரோ?

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் இறந்துவிட்டால் அதோடு அவர்கள் பிரச்சினை தீர்ந்து விடுகிறது. ஆனால் அரைகுறை உயிரோடு காப்பாற்றப்படுவோர் நிலைமை பரிதாபம்தான். உயிர்தப்பியவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து பொலிஸார் கொடுக்கும் பிரச்சினைகள் கொடூரமானது. தற்கொலையை நாடியவர்களின் மனப்புண்ணுக்கு மருந்திடாமல் அதைக் குத்திக் கிளறி அடுத்தமுறை தப்பிக்கவே முடியாதபடி தற்கொலைக்கு முயற்சிக்கும் எண்ணத்தை பொலிஸ் நடவடிக்கைகள் உருவாக்குவதாகச் சொல்லுகின்றனர் சமூக அக்கறையாளர்கள்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களைத் திருத்தி பொது வாழ்வில் ஈடுபடச் செய்வதற்கு சட்ட ரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கைகளால் பயனேதும் ஏற்படமாட்டாது. மனரீதியாக மாற்றம் ஏற்பட வேண்டும். 'கவுன்ஸிலிங்' முறைப்படி அவர்களுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். சட்டத்தின்மூலம் தடுக்கலாமென்பது தோல்வியில்தான் முடியும்.

தற்கொலைக்கு யாரேனும் முயற்சிக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தால் போதும் அவர்கள் வீடு தேடிச் சென்று ஆறுதல்படுத்தும் கவுன்ஸிலிங் முறைகள் அயல்நாடுகளில் வெகு பிரபலம். ஆனால் நம் நாட்டில் தற்கொலை முயற்சிகள் சட்டத்தின் பிடியில். இது நல்ல அணுகுமுறை அல்லவென்று உளவியலாளர்கள் கூறுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களை யோகா, தியானம் என்பவற்றில் ஈடுபடுத்த வேண்டியது சமூகக் கடமை என்கின்றனர். அத்துடன் தொண்டு நிறுவனங்களும் இவற்றில் அக்கறை காட்ட வேண்டுமென்பது நிபுணர்களின் எண்ணம்.

கிராமப்புறமாக இருந்தாலும் சரி, நகரப் புறமாக இருந்தாலும் சரி மக்கள் தங்களுடைய பிரச்சினைகளைப் பெரிதுபடுத்திப் பார்க்கிறார்கள். அப்படி இல்லாமல் தங்களுடைய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேசித் தீர்வினைக் காண முயற்சி செய்தால் தற்கொலை உணர்வுகளைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

தற்கொலைக்கு முயன்று தோற்றவர்களுக்கு ஆறுதல் கூறி உற்சாகப்படுத்துவது ஒருமுறை. அதே நேரத்தில் பொலியோ, எயிட்ஸ் போலத் தற்கொலையைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுப் பிரசாரத்தை முடுக்கிவிட வேண்டியதும் அவசியம். பிரச்சினைகளை எதிர்கொண்டு ஜெயிப்பதே புத்திசாலித்தனமான வாழ்க்கை என்பதை மக்கள் மனதில் அதுவும் குறிப்பாக இளைஞர்களிடம் பதிய வைப்பதே அதிகரிக்கும் தற்கொலைகளைக் குறைக்கும் வழியாகும். (கு)

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 65

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'காதல்' புகழ் நாயகியான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும 11 ஆம திகதிககு முனனர் கிடைககக் கூடியதாக அனுபபிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 65**
**வலம்புரி ~ சங்குநாதம**
**இல.03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவு செய்யபபடடு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-65

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................

அனுப்புபவரின் முகவரி :-..........................

..........................

..........................

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 63
சரியான விடை





பாடகி சித்ரா

### இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 63இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :~ | தே.தேனுஜா<br>உடுவில் மேற்கு,<br>உடுவில். |
| இரண்டாம் பரிசு | :~ | S.ராகவன்<br>கே.கே.எஸ்.வீதி,<br>சுன்னாகம். |
| மூன்றாம் பரிசு | :~ | K.புஸ்பராணி<br>வடலித்தோட்டம்,<br>புலோலி மத்தி,<br>தம்பசிட்டி. |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

வே.குமராசுவாமி, கரவெட்டி. ஜெ.ஜனரூபன், யாழ்ப்பாணம். P.செல்வராணி, வட்டுக்கோட்டை. வி.செல்வநாயகம், புத்தூர். கு.மேகலா, கொக்குவில். ம.ஷாயகா, உடுவில். வி.இளங்கோ, கோப்பாய், சு.விதுஷன், வண்ணார்பண்ணை. சொ.நித்தியா, கொக்குவில். வ.சுதர்ஸன், நாவலர்வீதி, சு.வனிதா, யாழ். லோ.அபிராமி, வல்வெட்டி. P.பவானி, கொக்குவில். கை.தாரணி, கைதடி. து.நக்கீரன், மல்லாகம். க.கைலாசம், இணுவில். க.குகாயினி, கைதடி. கு.நிரோஜன், சண்டிலிப்பாய். சு.அபர்ணா, உடுவில். த.பிரதீபன், பருத்தித்துறை. துர்க்கா, யோகபுரம் L.கீர்த்திகா, உடுப்பிட்டி. லோ.சுவஸ்திகா, யாழ்ப்பாணம். மா.மதுஷன், நாவாந்துறை. வ.நிசாந்தன், காரைநகர். ஆ.நிஜந்தினி, வடமராட்சி. வ.நிதுஷன், யாழ்ப்பாணம். சு.அகல்யா, மானிப்பாய். வி.நந்துஜா, வண்ணார்பண்ணை. ச.திவ்வியசசி, சித்தன்கேணி. இ.ராஜன், வடமராட்சி. L.விஜி, உடுப்பிட்டி. ம.சிந்துஜா, பொலிகண்டி. சிந்துஜன, ஓடக்கரை. க.பிருத்வி, இணுவில்.

# எதிரிகளைத் திணறடித்த கரும்புலிகள்!

உலக விடுதலை வரலாற்றினை உன்னிப்பாகக் கவனிக்கும் எவரும தமிழீழ விடுதலைப புலிகள் போன்ற வீரம் செறிந்த வரலாற்றினைப் படைக்கும் ஒரு இயக்கம் இல்லை என்பதனை ஏற்றுததான் ஆக வேண்டும். விடுதலைப புலிகளின் வீர வரலாற்றினை நாம் எண்ணுகின்ற பொழுது, நெல்சன் மண்டேலாவின் தலைமையில் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற கறுப்பர்களின் போராட்டத்தையும், மறைந்த தலைவர் அரபாத்தின் தலைமையில் நடைபெற்ற பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் ஒப்புநோக்குவதுண்டு. இன்று தென் ஆபிரிக்காவில் கறுப்பாகள விடுதலை பெற்றுள்ளனர். பலஸ்தீனத்தைப் பொறுத்தவரையில் ஜசர் அரபாத்தின் மறைவையடுத்து ஒரு குழப்பநிலை அங்கு நிலவுகின்றது.

பலஸ்தீனத்தைப் பொறுத்தவரையில் இழந்த நாட்டை மீட்பதற்காகப் போராடுகின்றார்கள். நாமோ இருக்கின்ற நாட்டை இழக்காதிருக்க போராடுகின்றோம். மேற்குறித்த இரு நாடுகளுக்கும் வெவ்வேறு நாடுகளில் ஆதரவு இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் உலக நாடுகளின் ஆதரவு அற்ற நிலையிலும் எதிர்ப்புக்கிடையிலும் எம் போராட்டம் தொடர்கின்றது.

இததகைய வீரம் செறிந்த, தியாகம் படைத்த விடுதலைப் புலிகளின் பிரிக்க முடியாத அங்கமாக விளங்குவது தான் கரும்புலிகள் அமைப்பு. கரும்புலிகள் என்ற சொற்றொடர் இன்று உலகம் முழுவதும் பயபக்தியோடு பேசப்படுகின்ற சொலலாக விளங்குகின்றது. தம் உயிரை துசசமென மதிதது, சாவா வாழ்வா என்று கரும்புலிகள் நடாத்துகின்ற போராட்டத்தைக் கண்டு உலகமே வியப்பில் மூழ்கியுள்ளது.

### கரும்புலிகள் பற்றி பிரபாகரன் மொழிந்தவை

ஒரு சமுதாயத்திற்காக ஒரு தனி மனிதன் சாகத துணிவானாயின் அச் சமுதாயம் வாழும என்று அண்ணல் காந்தி கூறியுள்ளார். ஈழத் தமிழரைப் பொறுத்தவரையில் எமது விடுதலை வேட்கையை நிறைவேற்ற ஒருவர் மட்டும் அல்ல. ஆயிரக்கணககில் சாகத்துணிந்துள்ளோம். முன்பு கரும்புலிகளை வர்ணிக்கும் போது "தற்கொலை" படை என வர்ணிபதுண்டு அச்சொல் போதியளவு தக்க பொருளை உணர்ததாத நிலையில் அது இப்பொழுது தற்கொடைப் படையாக மாற்றப்பட்டுள்ளது. இது தன் கொள்கைக்காக, இனத்திற்காக, நாட்டிற்காக தமமைக கொடுக்க முன்வந் தோர் என்ற பொருளை உணர்த்தி நிற்கின்றது. "தமிழீழ விடுதலைப் புலிகளின் பலவேறு போர் வடிவங்களில் மிக உயர்ந்ததும், உன்னதமுமான போர் வடிவம் தான் கருமபுலித்தாக்குதல் ஆகும். தன்னை இழந்து அல்லது எதிரிகள் பலரை அல்லது எதிரிகள் பலமிக்கதொரு இலக்கை அழிக்கக்கூடிய படையணி ஒன்றை அமைக்கும் எண்ணத்தை தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடக்கத்திலிருந்தே கொணடிருந்தார்" அந்த எண்ணக்கரு செயல் வடிவம் காண படிப்படியாக உயிர்த்தியாகம் செய்யும் வீர்களை எம் தலைவர் பிரபா உருவாக்கி வந்தார். சிங்களப் படையினர் **operation liberation** என்ற பெயரில் படை நடவடிக்கை வாயிலாக வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய போது நாம் வெற்றி அடைந்துள்ளோம் எனக் கொக்கரித்தனர்.

### யூலை 5-1987இல் கரும்புலித் தாக்குதல்

வடமராட்சியைக் கைப்பற்றியது உளவியல் அடிப்படையில் தாம் பெரும் வீரர் என்ற எண்ணத்தைச சிங்களவர் கொண்டிருந்தனா. இத்தகைய உளவியல் வளர்ச்சியை சிங்களப் படை கொண்டிருப்பது எமக்கு ஆபத்து என்று உணர்ந்த நம் தேசியத் தலைவர் ஒரு கரும்புலித் தாக்குதலை நடாத்த வேணடிய தேவை உண்டென்பதை அவர் உணர்ந்து அதற்கு செயல்வடிவம் கொடுத்தார்.

1987ஆம் ஆண்டு யூலை 5இல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள முதலாவது கரும்புலி வீரன் புகுந்து அம் முகாமை சுக்குநூறாக்கினான். சிங்கள அரசையும் அதன் படைப் பலததையும் கிலிகொள்ளச் செய்த அம் முதலாவது கரும்புலித் தாக்குதலை இனிதே நிறைவேற்றி வைததவர் எங்கள கப்டன் மில்லர். இத் தாக்குதலை அடுத்து இன்று வரை உலகம் வியக்கும் பல கரும்புலித தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இந்தக் கரும்புலித் தாக்குதலில இறப்பில் இன்பம் கண்ட வீரர்களினதும், வீராங்கனைகளினதும் எண்ணிக்கை பெருகிக் கொணடே போகும். தாக்குதல் நடாத்த போகும் கரும்புலிகள் திரும்பி வரும் எண்ணத்தோடு போவதில்லை. "உயிர் நமக்கு வெல்லம் அல்ல உணருவாய் நற்தமிழனே" என்று ஓங்கி ஒலித்துக்கொண்டு தான் களம் புகுகின்றார்கள். இப் போரில் வெற்றிக்குப் பின் திரும்புவோர் எண்ணிக்கை மிகக் மிகக் குறைவு. வெற்றியோடு சாவை இறுக அணைத்தோரின் எண்ணிக்கையே மிகப்பெரிது.

சாதாரண போராட்டத்தில் வெற்றி பெற்றுத் திரும்பலாம் என்ற நம்பிக்கை சிலருக்கு இருக்கலாம். ஆனால் கரும்புலிகளைப் பொறுத்த வரை தாம் களத்தில் இறப்பது உறுதி எனற நிலையிற்றான் களம் புகுகின்றார்கள். கரும் புலிகள் வெடிமருந்தை தங்களுடன் எடுத்துச செலகின்றாாகள். எதிரிகளின் படை பலம் பற்றி இவர்கள் அக்கறை கொள்வதில்லை. விளைவைப்பற்றிப் பொருட்படுத்தாது தம பலததையே நம்பி இவர்கள் களத்தில் குதிக்கின்றார்கள். இவர்களின் தாககுதல் தரைப் படையையும், கப்பற்படையையும், காவற்படையையும், வான் படையையும் உள்ளடக்கும். இவற்றின் பொருளை நாம் விரிக்கத் தேவையில்லை. பொருள்



தொககு நிற்கின்றது என்றே நாம் குறிப்பிடலாம.

1987யூலை 5ஆம் திகதி கரும்புலி (**Black Tigers**) வடமராட்சி நெல்லியடியில் நடாத்திய தாக்குதல ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை சிங்கள ஆட்சியையும், சிங்களப் படையையும் தொடை நடுங்கவைத்தது. இந்திய அரசையும் உலக நாடுகளையும் அதிர்ச்சி கலந்த வியப்பில் ஆழ்த்தியது. சாகத் துணிந்த எம்மை நீ என்ன செய்யப் போகின்றாய் என்று கேள்வி கேட்கின்ற முறையில் இப்போராட்டம் நடந்தது. நெல்லியடிப் போராட்டத்தில் எமக்கு முன் மாவீரனாகக் காட்சி அளிப்பவர் மில்லர். அவரின் தியாக வரலாற்றினை வரைவதறகு வரலாற்றில் பல பக்கங்கள் தேவை. மில்லரின் மாவீரத்தை வரலாறு விரும்புகின்ற அளவிற்கு வரையட்டும். ஆனால் கரும்புலி கப்டன் மில்லரைப் பதது மாதம் கருவில் தாங்கி பரிந்து காத்த அவரின் தாயாரின் கூற்றுக்கள் தான் எமக்கு இன்று தேவை.

### மில்லரைப்பற்றி அவரது தாயார்..

"என்ர மகன் எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செயவான் என்கிறது என்ர நம்பிக்கை, தம்பி அதனால நான் அவன்ர போக்குகளைப் பற்றி பெரிசா யோசிக்கிறதில்லை" மில்லரின் அம்மா தன் பிள்ளையைப் பற்றிப் பெருமையோடு கூறிக்கொண்டு இருந்தார். அவன் ஒரு துடியாட்டமான பெடியன். ஒரு இடத்தல் ஆறுதலாக இருக்கிறதைக் காணவே ஏலாது. ஏதாவது ஒண்டு செய்து கொண்டு தான் இருப்பான. மண்ணைக் கிண்டுவான், பற்றறியையும் வயரையும் வைசசு முடிஞ்சு கொணடிருப்பான அலலது அப்பாவின்ர கார் பெனட்டை திறந்து போட்டு அதற்குள்ள ஏதாவது கழட்டிப் பூட்டிக்கொண்டிருப்பான்..." அம்மா தொடர்ந்து சொல்லிக் கொணடிருந்தார்.

"மற்ற ஆட்களுக்கு உதவி செய்யிற பழககம் அவனிட்ட சின்னனில் இருந்தே இருந்தது. ஆர் என்ன உதவி கேட்டாலும் உடனே போய் ஒசயது கொடுப்பான்... முயற்சியும் இரக்கமும் அவன் பிறக்கும்போதே அவனோட கூடப் பிறந்ததுகள், தம்பி" மில்லர் சிறுவனாக இருந்த நாட்களில் அப்பா கார் ஓட்டும்போது அருகில் இருந்து அவதானித்துக் கொண்டிருப்பவன், அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்ப செய்து பார்க்கத் துவங்கினான. அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பினபு மெல்ல உருளத் துவங்கியது. நாட் செலலச் செல்ல அகலமான வீட்டு முற்றத்தில் முன்னுககும் பின்னுக்கும் போய் வந்தது. ஒருநாள் அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்தபோது கார் வதியிலே ஏறி விக்கி விக்கி ஓடத் துவங்கிவிட்டது. அம்மாவைப் பயம் பற்றிக் கொள்ள வதியிலே ஓடிவந்து பார்த்தார்.

இப்படித்தான் இன்னும் ஒருநாள்... மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் தீர்ந்து போனதால் வீட்டுக்கு முன்னால் நின்று தண்டாடிக்கொண்டிருந்தார்கள். எங்கோ இருந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண் டிருந்த மில்லர், அவர்களிடம் விடயத்தைக் கேட்டறிந்தான். வீட்டுக்குள் வந்தவன், மெது வாக ஒளித்து ஒளித்து பின்னால் போய் கார் "ராங்கிற்குள்" குழாயைச் செலுத்தி, வாயால் இழுத்துப் பெற்றோல் எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பி விட்டு ஒரு அசல் அப்பாவியைப் போல அம்மாவுக்கு முன்னால வந்து நின்றான். நடத்தைக் கண்ட போதும அம்மா அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அம்மா வுக்கும் அது பிழை மாதிரித் தெரிய வில்லை.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகவே செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அதனால அவனது செய்கைகளைப் பற்றி அமமா கவலைப் படுவதிலலை. காலச் சக்கரம் தனபாட்டில உருணடு சென்றது. இப்போது 1984 இன ஆரம்பம். எங்கள் தேசத்தல் அடிக் கடி வெடியோசை கேட்கத் தொடங்கியது. எங்கள் மக்களின் இயலபு வாழ்க்கை மாறயபொழுது அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. மில்லரின் போக்கும் மாறிவிட்டது. முன்பு போல், பழைய நண்பர்களுடன், மாந்தோப்பில் விளையாடு வது நின்று போனது. புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் தொடங்கினான. ஒருநாள் பளளிக் கூடததிலிருந்து அவசர அவசரமாக ஓடிவநத தம்பி சொனனான் "அம்மா அம்மா அண்ணா சந்திய டியில நோட்டிசு கொடுததுக் கொண்டு நிக்கிறான்"

அம்மாவுக்கு உள்ளூரப் பயம்தான். ஆனாலும் அம்மா அவனைப் புரிந்து கொண்டார். அவனின் புதிய நண்பர்கள் அவனைத் தேடி வீட்டுக்கு வருவார்கள். மில்லர் அவர்களோடு புறப்பட்டுப் போவான். இப்படி சொல்கிறவன் சில நேரங்களில் ஒருசில இரவுகள் கழித்தும் வருவான். அம்மா எல்லோருக்கும் சாப்பாடு தருவார். எல்லோரும் சிரித்துக் கதைத்து சந்தோசமாக சாப்பிடுவதைப் பார்த்து சந்தோசபபடுவார். இது வழமையாகிப்போனது.

இப்படித்தான் ஒருநாள் அந்த நண்பர்களோடு புறப்பட்டுப் போனவன் திரும்பி வரவில்லை. "பயிற்சி முகாமில் நிக்கின்றான்" என நண்பன் ஒருவன வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவரும் அழுதார். இருந்தாலும் சமாளித்துக்கொண்டார்.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அந்தத் தாய் இறுதி நாளை நினைதது்ப் பார்க்கிறார். "அது ஒப்பறேசன் லிபறேசன் காலம். அந்த நேரம் இங்க எல்லா இடத்திலையும் ஆமி, அதனால இரவில நாங்கள் நேரத்தோடையே படுத்திடுவம். அண்டைககும் நாங்கள் படுத்திட்டம்..." "திடீரென வீடெல்லாம் அதிர பெரும் குண்டுச் சத்தம் எங்களைத திடுக்கிட்டு எழுப்பிச்சுது. கொஞ்ச நேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக்கொணடிருநதது. பிறகெல்லாம் அமைதியாகிவிட்டது. பொடியள் நெல்லியடிப்பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்கு எனறு எங்களுக்கை கதைச்சுப் போட்டு நாங்கள் படுத்திட்டம்.

அடுத்த நாள் காலையில் நெல்லியடிப் பக்கம் இருந்து வந்த ஒருத்தர் சொல்லி ஊருக்குள அந்தக் கதை மெல்ல மெல்ல என்ர காதுக்க வந்த போதுதான் தொியும்... முதல் நாள உலுக்கி என்ர நித்திரையால் திடுக்கிட வைத்த அந்தக் குண்டுச்சத்தம்.. என்ர பிள்ளையும்... அப்ப அழவும் ஏலாது. எல்லாப் பக்கத்திலையும் ஆமி.. அறைககுள்ள போயிருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக் குமுறி அழுதன. றோட்டால ஆமி வாகனங்கள வாற சத்தம் உறுமிக கொணடு கேட்கும்.. மெதுவாக பின் பககத்தால் வீட்டை வந்த சனங்கள் கலைஞ்சு போய் விடுவினம்... பிறகு வருவினம்..."ம்...ம்...என்ர மகன செத்திட்டான் என்கிறது எனக்கு கவலை தான். ஆனால அவன் நாட்டுக்காகததானே செத்தவன்... "அதை நிணைகக பெருமையாகத்தான் இருககு."

தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தான். இராணுவத்தினா ஆக்கிரமிப்புக்குள் இருந்த நெல்லியடிப் பகுதிக்கு வெடிமருந்துகளையும், வாகனங்களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாக கொணடுவந்து சேர்த்தான். அவ்வேளைகளில் கூட நான் அடுத்த நாள் இறக்கப் போகிறேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்து கொள்ளவிலலை. கவலையோ, திகைப்போ, பயமோ அல்லது தயக்கமோ அவனிடம் காணமுடியவில்லை. வெடிமருந்துகளை ட்றக் வாகனங்களில் ஏற்றி அவறறுக்கு இணைப்புகளைக் கொடுத்து தன்னுடைய சவப்பெட்டிகளை தானே தயாரித்துக் கொண்டு இருந்தான்.

### முகாமை நோக்கி மில்லர் படை நகர்ந்தது

அன்று பகல் முழுவதும் வெடிமருந்துகளுடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. நேரம் இரவாகிய போது குழுக்கள் யாவும் முகாமை நோக்கி நகரத் தொடங்கின. மில்லர் தன்னுடைய வாகனத்தில ஏறி அமர்ந்து கொண்டான். கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கிச்செல்ல வேண்டிய பாதையில் போடப்பட்டு இருநத தடைகள் உள்ள பகுதியை சென்றடைந்தனா. ஏனைய குழுககளும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

பொறுப்பாளரிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கடடளை பிறப்பிக்கப்பட்டது. எல்லோரும் முகாமை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். மில்லர் ஏறி அமர்ந்து இருந்து ட்றக வண்டியை அழுத்தி எஞ்சினை உறுமி விடடு அமைதிப் படுத்தினான். பின் தன் வண்டி செல்வதற்கான உத்தரவுக்காகக் காததிருந்தான். அப்போதுகூட பக்கத்தில் இருநத பிரபுவோடு ஏதோ நகைச்சுவையோடு பேசி சிரித்துக்கொண்டிருந்தான். முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செயது கொணடிருக்கையிலேயே கமல் குறுககே பாய்நது தடைகளை அகற்ற முயன்றான். பெரிய மரக்கட்டைகள் புதைக்கப்பட்டு இருநதன. தான் கொண்டுவந்த வெடிமருந்துப் பெட்டியை கட்டைகளின் பின் வைத்து விடடு விலகி மறைவில் படுத்துக்கொண்டான். வெடிமருந்து வெடித்தது. அத்தோடு கட்டைகள் தூக்கி எறியப்பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப்பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவததினரின் இயநதிரத் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கியது. கமல் தன்னுடைய நடமாடும் தொலைபேசியில் (வாக்கிடோக்கியில்) அறிவித்தான். "தடைகள் அகற்றபபட்டு விடடது" ஆனால் புதிய சிக்கல்பாதைக்கு நேரேயுள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச்சூடு வருகிறது சற்றுப்பொறு.

மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் நடமாடும் தொலைபேசியிலும் (வாக்கியிலும்) அறிவிப்பு தெளிவாகக்கேட்டது. மில்லர் ஒருமுறை சற்று சிரித்துக் கொண்டான் ஏன் என்று புரியவில்லை. அருகிலிருந்த பரபாவுக்கு கேட்க மனம் துணியவில்லை. பிரபா முன்பு ஒருமுறை யாழ்ப்பாணத்தில் விட்ட வாகனம் சரியாகச் செல்லவில்லை. எனவே இம்முறை நான் நிதானமாகவே வாகனத்தைச் செலுத்துவேன். எப்படியும் கட்டடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தைக கொண்டுசெல்வேன் என்று மில்லர் கூறினான்.

வண்டி நெல்லிடியச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்

மா.க.ஈழவேந்தன்

கான கருவியை இயக்கினான். கருவி இயங்கத் தொடங்கியது. மில்லர் வண்டியைப் மெதுவாக ஓடவிட்டான். பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்து ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து "மில்லர் எப்படியும் திரும்பி வந்துவிடு" மில்லர் அதைப் புரிந்துகொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக்கொண்டிருக்க மில்லரையும் வெடிகுண்டையும் சுமந்துகொண்டு வண்டி சென்றுகொண்டிருந்தது.

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்து தோழர்கள் முகாமைவிட்டு 100யார் பின்னுக்கு வந்தனர். கமல நின்ற இடத்தைத் தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்து பின்னுக்குச்செல்ல சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது. தோழர்கள் மீண்டும் முகாமை நோக்கி முன்னேறினார்கள். இராணு வத்தினர் தங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்த மிகப் பெரிய மாடிக கட்டடம் தரை மட்டமாகக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத்தினர் கட்டடத்தின் உள்ளேயே இறந்து போனார்கள். மில்லரின தாக்குதலைத் தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில கமலும் வீரச்சாவடைந்தான். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எடுத்து வரப்பட்டது. ஆனால மில்லர் திரும்பவே இல்லை. மில்லா வெடிமருநதின் அதிர்வலைகளோடு சங்கமமாகி சனபணியை செவ்வனே முடிக்கான். □

# குருநகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலிருந்து...





இராணுவ காவல் அரண்களுக்கு எதிரே ரயர்கள் எரிக்கப்படுகின்றன



வீதித்தடை



அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அமலதாஸ் ராஜ்குமாரின் உடல்



இராணுவத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள மக்கள்




அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை - பதாதைகள்

# இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகியுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்

## குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் செய்வதற்கான இராணுவத்தின் பாஸ் நடைமுறை இரத்துச் செய்யப்பட வேண்டும், இராணுவத்தின் கரையோர முகாம்கள் அகற்றப்படவேண்டும் மற்றும் குடியிருப்புக்களுக்கு மத்தியில் உள்ள இராணுவமுகாம்கள் அகற்றப்பட்டு இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறறப்படவேண்டும் என குருநகர் கடற்றொழில் அபிவிருதிச் சங்கம் வேண்டுகோள் விடுததுள்ளது.

கடந்த சனிக்கிழமை குடாக் கடலில் தொழிலுக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த குருநகர் மீனவர் ஒருவர் இராணுவத்தின் மின்சார வேலியில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து நேற்றுக் காலை இடம பெற்ற ஆர்ப்பாட்டத்தின இறுதியில யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே மேற்படி கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 02.07.2005அன்று அதிகாலை குருநகா இறங்குதுறையில், கடறறொழிலுக்குச் சென்றுவிட்டு வீடுநோக்கித் திருமபிக்கொண்டிருந்த ஒரு இளைஞன ஸ்ரீலங்கா இராணுவச் சோதனைச் சாவடியில் கொல்லப்பட்டமை தமிழின அழிப்பின் ஒரு அங்கமாகக் கருதி இன்று முழுமையான மறியல் போராட்டத்தை நடத்திக் கண்டனத்தைத் தெரிவித்து, இம் மகஜரை தங்களது கவனத்திற்குத் தருகிறோம்.

இலங்கைத் தீவில் வாழ்கின்ற சுயநிர்ணய உரிமைக்கான மறுக்க முடியாத தகமையைக் கொண்டுள்ள தமிழ் மக்களது வரலாறு துயர் படிந்ததாக உள்ளது. ஜனநாயக அரசென்று கூறிக்கொண்டு மாறி மாறி வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் தமிழினத்தை அரச நிர்வாக ரீதியாகவும், இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவும் இன அழிப்பு செயற்பாடுகளை கற்பிதமான நியாயப்பாடுகளின் அடிப்படையில், ஸ்ரீலங்கா பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தை நிலை நாட்ட முயன்று வருகின்றன.

இச் செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்த இளைஞன் அமலதாஸ ராஜ்குமாரின் படுகொலையை கருதுகின்றோம். குருநகர் இறங்கு துறையில் அந்த இளைஞன் தொழிலுக்குச் சென்று திரும்பி வரும் போது இராணுவ காவலரணிலுள்ள மின்சாரம் பாய் சசப்பட்ட தகரத்தில் அவன கொண்டு வந்த தொழில் உபகரணம் தீண்டியதால் மின்சாரம் தாக்கி அந்த இடத்திலேயே அவன உயிர் பறிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலுக்குச் செல்வதற்கு அனுமதி அட்டை (அடையாள அட்டை)வழங்குவதற்கென அமைக்கப்பட்ட காவலரண்கள் மீனவர்களைக் கொடூரமாகக் கொலை செய்யும் கொலைக் களங்களாக மாறியிருக்கின்றன.

இவ்வாறு தன்னிச்சையாக மரண தண்டனை வழங்கியதன் மூலம் மனித குலம் வாழ்வதற்கான உரிமையை -சுயமாக தொழில் செய்வதற்கான மனித உரிமையைஸ்ரீலங்கா அரசாங்கமும்,ஸ்ரீலங்கா படைத் தரபபும் மீறி உள்ளனஎன்ற குற்றச்சாட்டை முன் வைக்கின்றோம்.

எனவே,ஸ்ரீலங்கா படைத்தரப்பின் தொடர் கொடூரங்களால் பாதிபபுற்ற நாம், ஜனநாயகத்தின் பேரால், மனித உரிமைகளின் பேரால், உயிர் வாழ்வதற்கான உரிமையின் பேரால் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.

★ நாம் சுதந்திரமாக கடலில் தொழில் செய்வதற்கு இடையூறாகவுள்ள இராணுவ அனுமதிச் சிட்டை நடைமுறை நிறுத்தப்பட வேண்டும்.

★போா நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள இயல்பு வாழ்க்கைக குத் திரும்புதல் என்ற பகுதியை கேலிக்குரியதாக்கும் ஸ்ரீலங் காப்படையினர் உடனடியாக கரையோர முகாம்களை அகற்றவேண்டும்.

★ எமது குடியிருப்புக்களில் இருந்து எம்மை விரட்டி விட்டு அங்கு தங்கியிருக்கும் ஸ்ரீலங்காப் படையினா அவ்விடத்தை விட்டு அகல வேண்டும.

இக்கோரிக்கைகள் மனிதத் திறபாற்படடவை. இவை நிறைவேற்றப்படாவிடடால் நாமே எமது தலைவிதியை நிர்ணயிப்பவர்களாக ஸ்ரீலங்கா படைத்தரப்பினரை வெளியேற்றுகின்ற நடவடிக்கைகளில் இறங்கும் சூழ்நிலைக்குத் தள்ளப் படுவோம என்பதை சர்வதேச சமூகத்திற்கு அறியத்தருகின்றோம் என அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம மகஜரின் பிரதிகள் ஐரோப்பிய ஒன்றியம், அனைத்து தூதுவராலயங்கள், நோர்வே வெளிவிவகார அமைச்சு,மனித உரிமை ஆணைக்குழு, போர்நிறுத்த கண்காணிப்புக் குழு ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ரு-19)

## உளவள கற்கை நெறியை பூர்த்திசெய்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு



















(படங்கள் :-ஞா.ஐங்கரன்)

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவகத்தின் பாதிக்கப்பட்ட பிரதேச பிள்ளைகளுக்கான செயல் திட்டத்தின் கீழ் நான்காம் தொகுதியாக உளவளதொகுதி கற்கை நெறியை பூர்த்திசெய்த 35 ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகதுணைவேந்தர் சு.மோகனதாஸ் கலந்துகொண்டார்.

கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவகத்தின் தொழில் நுட்ப ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா, யாழ். பல்கலைக்கழக உளவள மருத்துவத்துறை பேராசிரியர் தயா சோமசுந்தரம்,யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புக்கள் போராசிரியர் வேதநாயகம், போராசிரியர் சண்முகதாஸ், திருகோணமலை மாவட்ட கல்விக் கழகப பொறுப்பாளர் கவி அன்பன்,வலிகாம வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன்,வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னால் மேலதிக செயலாளர் செல்வி தி.பெரியதம்பி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை பிரதம விந்தினர்,கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். இதனைத் தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன. அடுத்து சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ரு-19)

## தென்மராட்சியின் கல்வித்தரம்பற்றி கல்விச் சமூகம் ஆழ்ந்த கவலை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தில் சேவை செய்கின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களில் சுமார் 80 சதவதமானோர் தமது இருப்பிடங்களை யாழ்ப்பாணத்தில் அமைத்துககொணடுள்ளதால்- பாடசாலைக்கு நேரம் பிந்தி வருவதாலும், வீடுகளுக்கு முந்திப்போவதாலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரும் இடையூறுகளுக்கு உட்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இத்தகைய ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் போக்குகள் குறித்து தென்மராட்சி கல்விச் சமூகமும் சமுதாய ஆர்வலர்களும் பெரும் அதிருப்தியும், கவலையும் அடைந்துள்ளனர்.

இதேவேளை, தென்மராட்சிப் பாடசாலைகளில் தற்போது நிலவி வருகின்ற கல்விப்பின்னடைவை போக்குவதற்குரிய உதவியாக மாலை நேர வகுப்புக்களை பாடசாலைகளில் நடாத்துவதற்கு பாடசாலைகளின் முகாமைத்துவங்கள் தயக்கம் காட்டி வருவதாகவும் தெரிய வருகிறது.

மேலும் கடந்த வாரம் சாவகச்சேரியில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி குறித்த விசேட கலந்துரையாடலில் பங்குபற்றிய அரசாங்க அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள, தென்மராட்சி கல்வி வலயத்தின் பணிப்பாளர் ஆகியோர் இவ்விடயம் குறித்துப் பிரஸ்தாபித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்விதம் இருக்க தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி நிலையானது மிகவும் தாழ்ந்த நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாக மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் கவலைகொண்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது. (அ-16)

# மாவட்டத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு கிராமங்கள் தோறும் விழிப்புக்குழுக்கள் அவசியம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் மிகவும் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாகப் பொதுமக்கள் நாளாந்தம் அச்சத்துடனும் பீதியுடனும் வாழ வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

மாவட்டத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதன் காரணமாக பொதுமக்கள் சேர்த்துவைத்திருக்கும் நகைகள் மற்றும் பணங்களை திருடர்கள் மிகவும் தநதிரோபாயமான முறையில், வீட்டாரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு அபகரித்துச் செல்கின்றார்.

இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்துவருகினற போதிலுமகூட, திருடர்களைப் பிடிக்க முடியாதநிலையில் சட்டத்தின் காவலர்கள் இருப்பதாகவும் தெரிய வருகிறது.

அரசாங்கத்துக்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம கைச்சாத்தாகிய மூன்றரை வருடகாலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் பல நூற்றுக்கணக்கான திருட்டுச் சம்பவங்களும் பகல் நேர இரவுநேர வழிப்பறிக்கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆயினும்கூட, இதுவரை எந்தவொரு திருட்டுச் சம்பவம் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தரப்பில் பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தாகும்.

இந்த வகையில் மாவட்டத்தில் இடம்பெற்றுவருகினற இரவுநேர திருட்டுச் சம்பவங்களைக் கண்காணிக்கவும், தடுக்கவும் ஏதுவாக கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த சமுதாய ஆர்வலர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்வது நல்லது எனக் கருதப்படுகின்றது.

(அ-16)

# ஆசிரியர் பயிற்சி மாணவருக்கான அனுமதி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 2005 ஆவது ஆண்டிற்கான ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கான அனுமதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி திருநெல்வேலியில் உள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில நடைபெறவுள்ளது.

இதில் உடற்கல்வி, கடல்வளம், விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் விவசாயம் ஆகிய பாடங்களைப் பெற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

அனுமதிபெற வரும் ஆசிரியர் மாணவர்கள் வரும்பொழுது அவரவர் தகுதியை உறுதிப்படுத்துவதற்கான மூல ஆவணங்களை எடுத்து வருமாறு பயிற்சிக் கலாசாலை அதிபர் கு.சதாசிவ மூர்த்தி கேட்டுள்ளார்.(ற-9)

# கரும்புலிகள் நாள் ஜூலை – 05

## விடுதலைக் குமுறல்

கரும்புலி சுமப்பது
வெடிகுண்டு அல்ல
தமிழரின்
விடுதலை மூச்சு
கழுத்தினில் கட்டியது
நஞ்சு அல்ல
ஈழவிடுதலை
இரகசியம்
மனித குண்டுகள் தருவது
வெறும் சத்தமல்ல
நசுங்கிய இனத்தின்
குமுறல்களே
இவர்களின் தாகமோ
தண்ணீரல்ல
தமிழீழ தாயகமே

அ.யசீகரன், கோண்டாவில்

## கோபுரமாய் கைதொழ...

ஆயிரமாயிரம் வார்த்தைகளால்
அர்த்தம் கற்பிக்கமுடியாத
சிறப்பாயிரம் இவர்கள்!
பனித்துளியாய்
ஜனனித்தவர்கள் -பகைதான்
பாறாங்கல்லாய் மாற்றிவிட்டது!
கனவுகளையும் -கற்பனைகளையும்
சுமந்தவர்கள் -எதிரிதான்
கந்தகத்தை சுமக்க
வைத்துவிட்டான்!
வெடிக்கும்போது
காற்றையும்
வடிகட்டி அனுப்புவர் -எமக்காய்
சூரியக்கீற்றையும்
சுத்திகரித்தனுப்புவர் -நாம்
அழுதலைந்து
நின்ற போதில்
விழுதிறக்கி நிழல் கொடுத்த
வீரியக்குழந்தைகள்!
இவர்களின் கல்லறை
கண்ணீர் சிந்தவல்ல...
கோபுரமாய் கைதொழ!.

நெற்கொழு தாசன் - வல்வை

## வீசுங்கள் அமைதியாய் எம் தேசத்தில் தென்றலாய்...

காலனுக்கே கட்டளை அனுப்பிய
காவிய நாயகர்களே
ஆயிரம் கனவுகள் உமக்குள் இருக்கலாம்
ஆனால் அவற்றினை
எம்தாயக விடிவிற்காய்
வீசியே எறிந்த விடிவெள்ளிகளே
நீங்கள் நேசித்த விடுதலை
விரைவில் பிறக்கும்
உங்கள் தியாகங்கள் எல்லாம்
விரைவில் பலிக்கும்
எங்கள் இரவும் விரைவிலே
விடியும் அதுவரை
வீசுங்கள் அமைதியாய்
எம் தேசத்தில் தென்றலாய்

புதுக்கவி

## தமிழர் தெய்வங்கள் தமிழீழ கரும்புலிகள்

தோழமைப் பூக்களின் தாமரைக் கவிதைகளே
காலனைக் கலைத்த கவிதை மாலைகளே
வழமையை மாற்றிய வேங்கை சூரியன்களே
இளமையை கரைத்த இரத்த நிலவுகளே

ஆழக் கடல்களின், ஆயுதக் கப்பல்களே
சூளும் பகைமுடித்த, சுதந்திர மொட்டுக்களே
பாளைச் சிரிப்பின், பைந்தமிழ் பெட்டகங்களே
நாளைய பூமியின் நந்தவன நதிகளே

காப்பியன் சூத்திரங்களே, வள்ளுவன் பாத்திரங்களே
யாப்பின் குயில்களே, யாதுமான கிளிகளே
மூப்பறியாத முகில்களே, முத்தான பந்தல்களே
தீக்குள் விரல்வைத்த தேசத்தின் கனிகளே

வாழ்க்கையை வாழ்வுக்காக வாழாத வள்ளல்களே
வரலாற்றை விடுதலையாக்கிய தமிழீழ கரும்புலிகளே
சூழ்ச்சியும் வஞ்சமும் தீண்டாத தீபங்களே
பூட்டிய விலங்குடைத்த புரட்சித் தெய்வங்களே

தமிழீழம் ஆக்குவோம், தமிழாகி ஆளுவோம்
தனியரசில் வாழுவோம், சமத்துவம் மீட்டுவோம்
சுமைகளை வீசுவோம், சுதந்திரமாய் பேசுவோம்
இமைகளை மூடோம், இலட்சியமாய் வாழுவோம்.

நல்லை அமிழ்தன்

## கரும்புலிகள்

கடலில் உலாவிய சிங்கப்படகு
அங்கே ஓர் சில நேவிக்காரர்கள்
கட்டு மரங்களில் மீன்பிடிக்கும்
நம் உறவுகளை நோக்கி
துப்பாக்கிப் பிரயோகங்கள்
உயிரற்ற உடல்களாய்
தினம் தினம் கரையில் மிதக்கும்
சடலங்களுக்கு
முற்றுப்புள்ளி வைத்தவர்கள்
தலைவன் வழியில் நடந்து
இளமைகளைத் துறந்து
தாயகம் ஒன்றே நம் இலக்குவென
தமது உடல் கரைத்தவர்கள்
இருளின் நடுவே நடந்து
தடைகள் உடைத்து
வழியைக் காட்டியவர்கள்
நாளைய விடியலுக்காய்
நம்மையே அர்ப்பணித்த
இவர் நாமம் என்றும் பாடுவோம்

மீசாலையூரான்

# அரசினதும் அமைப்புக்களினதும் வாக்குறுதிகளில் நம்பிக்கை இழக்கும் நிலையில் சாவ. வர்த்தகர்கள்

(தென்மராட்சி)

இரண்டாயிரம் ஆண்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தத்தின்போது சேதமடைந்த பகுதிகளை மீள கட்டியெழுப்பவும் புனரமைப்புச் செய்யவும் 2ஆயிரத்து 160 மில்லியன் ரூபா தேவை என தென்மராட்சி பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு மதிப்பீடு செய்துள்ளது.

இவ்வகையில் இத்தொகைக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசிடம் சமப்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதி வழங்கும் அமைப்புக்களிடமும் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன என்றும் அறியப்படுகின்றது.

இதேவேளை, யுத்தத்தினால் சேதமாக்கப்பட்டதும் அழிக்கப்பட்டதுமான சாவகச்சேரி நகரத்தினை துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்துவதற்கான் ஏற்பாடுகளும் திட்டம் சார்வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சாவகச்சேரி நகரத்தினை நவீனமயப்படுத்தும் வகையில் கொழும்பில் இருந்து ஒரு உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று சாவகச்சேரிக்கு விஜயம் செய்து யுத்தத்தினால் சேதமடைந்து புனரமைப்புச் செய்யப்பட்ட சாவகச்சேரி நவீன சந்தை, மற்றும் சரவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையையும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இது இவ்விதமிருக்க யுத்தத்தின்போது பாதிப்படைந்த சாவகச்சேரி வர்த்தக நிலையங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு என அரசினதும் நிதி வழங்கும் அமைப்புக்களினதும் நிதியுதவி கிடைக்கும் என வர்த்தகர்கள் எதிர்பார்த்து ஏமாறறமடைந்த நிலையே தொடர்வதாக சாவகச்சேரி வர்த்தகர்கள் சார்பில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், 2002ஆம் ஆண்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும், ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் வருகை தந்து பல விதமான வாக்குறுதிகளையும் உறுதி மொழிகளையும் வழங்கிச் சென்றுள்ளமை குறித்து நகரப்பகுதி வர்த்தகர்கள் பெரும் அதிர்ச்சியும அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

மேலும், யுத்தத்தினால் சேதமடைந்த வர்த்தக மற்றும் பொது அமைப்புக்களின் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும், நஷ்டஈடு கோரியும் சாவகச்சேரி வர்த்தகர்கள் அரசுக்கு விண்ணப்பித்த போதிலும்கூட எதுவுமே கிடைக்கவில்லை என்பதால் வர்த்தகர்கள் அரசினதும், அமைப்புக்களினதும் வாக்குறுதிகளை கவனத்தில் கொள்ளாமல் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-16)

# இலவச ஆங்கில வகுப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புக்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துவருவதாகவும் கழகத்தின் செயலாளர் லயன் எம்.பி. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வகுப்புக்களில் பங்குகொள்ள விரும்புவோர் சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள கழக செயலகத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-16)

# கரும்புலிகளின் தற்கொடையை நினைவுகூரும் கரும்புலிகள் தினத்தை எழுச்சியுடன் அனுஷ்டிப்போம்

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உன்னத போராயுதமாகிய கரும்புலிகளது தற்கொடையை நினைவுபடுத்தும இன்றைய நாளாகிய கரும்புலிகள் தினத்தை (யூலை-5) யாழ்ப்பாண மாவட்டம் மெங்கும் உணர்வெழுச்சியுடன் நினைவுகூர யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில், தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய நான்கு கோட்டங்களிலும் கரும்புலிகள் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற பிரதேச ஊரக கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் முன்னேற்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைவாக தீவகம் தென்மராட்சி, வடமராட்சி வலிகாமக் கோட்டங்களில கரும்புலிகள் நாள் நினைவுப பொதுககட்டங்கள், இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதில் சிறப்புரைகள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு கோட்ட ரீதியாக அனைத்து இடங்களிலும் நினைவுப்பந்தல்கள் வளைவுகள் அமைக்கப்பட்டு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு பதாதைகள் கட்டி எழுச்சிப்படுத்தப் பட்டுள்ளன.

அதேவேளை, ஒவ்வொரு வீட்டிலும் கரும்புலிகளது திருவுருவப் படம் வைதது வீரவணக்கம் செலுத்துமாறும் கோட்ட ரீதியாக நடைபெறும் நினைவு நாள் நிகழ்வுகளில அனைத்து தமிழீழ மக்களையும் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு கரும்புலிகளை நினைவு கூருமாறும் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப. கனகலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (ற)

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு - குறள்

வலம்புரி

## கரும்புலிகளின் ஒப்பற்ற தியாகத்தை சிங்களப் பேரினவாதம் மதிக்க வேண்டும்

இன்று ஜூலை 5 கரும்புலிகள் தினம். விடுதலைப் போராட்டத்திற்கு உரம் கொடுத்த உத்தமர்களை நினைவுகூரும் திருநாள்.

தமது உயிரை ஆயுதமாக்கி போராடிய கரும்புலிகளின் தியாகம் உலகிற்கோர் வரலாற்றுக் காவியம் ஆகும்.

ஓர் இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக போராட்டம் நடத்திய வரலாறு புதியதல்ல. அது உலகெங்கிலும் நடந்தும் நடந்து கொண்டிருப்பதும் ஆகும்.

ஆனால் தம் தேசத்தின் விடுதலைக்காக தமது இனத்திற்காக நாள், நேரம் குறித்து தம்மையே ஆயுதமாக்கி ஆகுதியாக்கும் தியாகம் இந்த உலகில் எங்கும் நடந்ததில்லை. இனிமேல் நடக்கப்போவதும் இல்லை என அடித்துக் கூறலாம்.

தமக்காகவன்றி தமது இனத்தின் எதிர்கால விடுதலைக்காக தமது உடலில் ஆயுதங்களைச் சுமந்து சென்று - இலக்குத் தவறாமல் தாக்குவதற்குப் பொருள் வெறும் துணிவல்ல. அதற்கு மானிடம் பேசும் மொழியில் வார்த்தையே இல்லை எனலாம்.

எந்த மனிதனாலும் செய்யமுடியாத அந்தத் தியாகத்தை விபரிப்பதற்கோ அன்றி விமர்சிப்பதற்கோ சாமானிய மனிதர்களால் முடியவே முடியாது.

பொதுநலம் என்பது சுயநலத்தின் அடிப்படை என்ற கருத்து உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் அந்த சுயநலம் இம்மியும் இல்லாது தம் தேசத்தின் நலனையும் எதிர்கால சந்ததியின் சுபீட்சத்தையும் மட்டுமே இலட்சியமாகக் கொண்டு தன்னுடலையும் உயிரையும் சேர்த்து அர்ப்பணிக்கும் ஒப்பரிய செயலை வெறும் கண்கொண்டு பார்க்கும் எந்த மனிதனாலும் கரும்புலிகளின் மாசற்ற தியாகத்தை மதிப்பிட்டுவிட முடியாது.

அப்படியாயின் தென்னிலங்கையில் பேரினவாத முட்டை போட்டு கொக்கரிக்கும் கோழிகளால் எங்ஙனம் உணரமுடியும்?

விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துவிட்டு யுத்தம் உறங்கிப்போக பழையவற்றை மறந்து வீராப்புப் பேசும் ஜே.வி.பி, ஹெல உறுமய உள்ளிட்ட பௌத்த மகாசங்கங்கள் கரும்புலிகளின் தாக்குதல்களை அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் தமது வீரத்தை மீளாய்வு செய்ய முடியும்.

படையில் இருந்து தப்பியோடியவர்களை மீளவும் இணைக்க முடியாதவர்கள் படைக்கு ஆட்சேர்ப்பில் தோற்றுப் போனவர்கள் இப்போது பொதுக்கட்டமைப்பை எதிர்க்கிறார்கள்.

இந்த எதிர்ப்பு எதுவரை என்பது சிங்கள மக்கள் நன்குணர்ந்துள்ளார்கள். அதன் காரணமாகவே பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்கு உண்ணாவிரதம் இருந்த போது "இவருக்கேன் தேவையில்லாத வேலை" என்ற கேள்வியை சிங்கள மக்கள் எழுப்பினர். ஜே.வி.பி. மறக்கலாம் பௌத்த பிக்குகள் நினைக்காமல் விடலாம். ஆனால் கரும்புலிகளின் தாக்குதலை சிங்கள மக்கள் மறக்கவே மாட்டார்கள். இது உண்மை.

இந்த உண்மைப்பாட்டில் சர்வதேச சமூகத்திற்கும் ஓர் தார்மீகக் கடமையுண்டு.

அதாவது ஓர் போராளி தனது உடம்பில் வெடிகுண்டைச் சுமந்துகொண்டு சிரித்த முகத்துடன் எதிரிகளின் பாசறையை நோக்கி ஏன் செல்லுகிறான்?

இந்தக் கேள்வியை சர்வதேச சமூகம் நடுநிலையோடு எழுப்புமாயின், அதற்கான விடை சிங்கள அரசு கூறும். பேரினவாத சக்திகளும் தமிழ் மக்களுக்குச் செய்த மிக மோசமான துரோகத்தனத்திற்கு தண்டனை வழங்குவதற்காக என்ற பதில் பளிச்சிடும்.

## யாழ். மாவட்டத்தின் தேவையறிந்து சேவையாற்ற வெளிநாட்டில் உள்ள தமிழ் வைத்தியர்கள் முன்வருகை

### யாழ். மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாக எடுத்து விளக்கி வெளியில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு சேவையாற்ற வருமாறு வைத்தியர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கு இணங்க, வெளிநாடுகளில் உள்ள வைத்தியர்கள் சிலா ஒரு சில மாதங்கள் யாழ். மாவட்டத்தில் சேவையாற்ற முன்வந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு போதியளவு வைத்திய நிபுணர்களும், வைத்தியர்களும் இல்லாமையினால் வெளிநாடுகளில் கடமையாற்றுகின்ற தமிழ் வைத்திய நிபுணர்களும் வெளி மாவடடங்களில் கடமையாற்றி வருகின்ற வைத்தியர்களும் இங்கு கடமையாற்றுவதற்கு முன்வரவேண்டும் என யாழ். மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கடந்த மாதம் வேண்டுகோள் விடுத்திருந்தா்ா.

இதன் பிரகாரம் அவுஸ்திரேலிய, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கடமையாற்றிவரும் தமிழ் வைத்திய நிபுணர்கள் சேவை அடிப்படையில் குறிப்பிட்ட சில மாதங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு முன்வந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சேவையாற்றுவதற்கு இணக்கம் தெரிவித்து யாழ். மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இதேபோன்று,யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் சில வைத்திய நிபுணர்களதும் மந்திகை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளில் மாதத்தில குறிப்பிட்ட சில தினங்கள் சென்று கடமையாற்றுவதற்கு முன்வந்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சிடம் அனுமதி கோரி கடிதமொன்று தற்போது அனுப்பியுள்ளதாக யாழ். மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ற-19)

## மக்களின் வாழ்விடங்களை விட்டு இராணுவத்தினர் வெளியேறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தான்தோன்றித்தனமான செயலை வன்மையாகக் கண்டிப்பதாக யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் தமிழத்தேசிய விழிப் புணர்வு கழகம் அறிக்கை விடுத்துள்ளன.

அவ் அமைப்புக்களின் அறிக்கையின் விபரம் வருமாறு,

**யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

கடந்த சனிக்கிழமை குருநகர் கடற்பரப்பில் தனது தொழிலை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய அப்பாவி இளைஞன் இராணுவத்தின் பாதுகாப்பு வேலிக்கு பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தினால் தாக்கப்பட்டு அதே இடத்தில் பரிதாபகரமாக கொல்லப்பட்ட சம்பவத்தினை யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொண்டுவரும் கொலை முயற்சியின் ஒரு அங்கமாகவே மக்கள் நடமாடும் பிரதேசங்களில் இராணுவத்தினர் தான்தோன்றித்தனமாக இவ்வாறான கொலை வலைகளை விரித்துள்ளனர்.

எமது ஏதுமறியாத அப்பாவி மக்கள் இவற்றில் சிக்கி கொல்லப்படுவது தொடர்ந்த வண்ணமே உள்ளது. இனியும் இராணுவத்தின் காடைத்தனத்தை அனுமதிக்க முடியாது.

இராணுவம் எமது மக்களின் வாழ்விடங்களை விட்டு உடனடியாக தங்கள் இடங்களுக்குச் செல்லவேண்டும். இல்லையேல் மக்கள் திரண்டெழுந்து இந்தக் கயவர்களை அவர்கள் இடங்களுக்கு அனுப்பி வைக்கும் காலம் மிக விரைவில் உருவாகும் என்பதை மீண்டும் இந்த இராணுவத்தினருக்கு வலியுறுத்திக் கூறுகின்றோம்.

இராணுவத்தின் தான்தோன்றித்தனத்தால் உயிர் இழந்த இளைஞனுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு இராணுவத்தினால் காவுகொள்ளப்பட்ட இளைஞனின் உறவுகளுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம்**

கடந்த சனிக்கிழமை குருநகர் கடற்பரப்பில் தனது தொழிலை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய அப்பாவி இளைஞன் இராணுவத்தின் பாதுகாப்பு வேலிக்கு பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தினால் தாக்கப்பட்டு அதே இடத்தில் பரிதாபமாக கொல்லப்பட்ட சம்பவத்தினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுமேற்கொண்டுவரும் கொலை முயற்சியின் ஒரு அங்கமாகவே மக்கள் நடமாடும் பிரதேசங்களில் தான்தோன்றித்தனமாக வாகனங்களைச் செலுத்தி, வாகனங்களால் அடித்து மக்கள் கொல்லப்படுவதும், இவ்வாறான மின்சரா வேலிகளால் மக்கள் கொல்லப்படுவதுமாக மாறி மாறி எமது ஏதுமறியாத அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுக்கொண்டே வருகின்றனர்.

போருக்கு நேரடியாக முகம் கொடுக்க திராணியற்ற இராணுவத்தினர் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் மக்கள் சக்தியினை படுகொலை செய்வதன் ஊடாக எமது போராட்டத்தை நசுக்க எண்ணுகின்றனர். இந்த இராணுவத்தின் க்படத்தனத்தை எமது மக்கள் நன்குணர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களுக்குப் அடிபணிந்துவிட எமது மக்கள் தயாராக இல்லை.

இந்த நேரத்தில் இராணுவத்தினருக்கு ஒரு கோரிக்கையை விடுக்கின்றோம். எமது மக்களின் வாழ்விடங்களை விட்டு உடனடியாக உங்கள் இடங்களுக்குச் செல்லுங்கள். இல்லையேல் உங்கள் வாழ்வு எங்கள் வாழ்விடங்களில் முடிந்தாக வரலாறு அமைந்துவிடும்.எனவே எம்மை கொலை செய்ய எண்ணுவதை நிறுத்தி உங்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுங்கள்.

இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி இளைஞனுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம். இளைஞனை இழந்து துடிக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(ற)

## பெற்றோர் பிள்ளைகளின் ஒழுக்கத்திலும் கல்வியிலும் மேம்பாடு அடையச்செய்வதில் ஆர்வம் காட்டவேண்டும்

### கோப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பரிதி

(கோப்பாய்)

பிள்ளைகளின் விளையாட்டில் குதூகலிக்கும் பெற்றோர்கள் இப் பிள்ளைகளின் ஒழுக்கத்தையும் கல்வியையும் மேம்படையச் செய்வதில் ஆர்வலராக இருக்கவேண்டிய நேரம் இது. இவ்விடயத்தில் பெற்றோர்கள் இம்மியளவும் சோர்வடையக் கூடாது என கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ச.ச. நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கோப்பாய் பகுதி அரசியல்துறைப் பொறுப்பாளர் து.செம்பரிதி தெரிவித்தார்.

நிலையத் தலைவர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வஞ்சமில்லாத பிஞ்சு நெஞ்சங்களிடையே நல்லொழுக்கப் பண்புகள் விஞ்சி நிற்கின்றன என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். ஆனால் அவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்படாதபோதே பிறழ்வான சிந்தனைகளுக்குத் தள்ளப்பட்டு ஒழுக்கமற்றவர்களாக மாறுகின்றனர்.

எனவே, இவர்களை நெறிப்படுத்தும் பொறுப்பிலிருந்து பெற்றோர்கள் ஒருபோதும் விலகிநிற்க முடியாது. இவ்விடயத்தில் ஒரு சில பெற்றோர்கள் அக்கறையற்றவர்களாக இருந்தால் அது சமூகத்தைப் பாதிக்கும் தொழுநோயாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

எனவே சிறுவயதிலிருந்தே எமது பிள்ளைகளுக்கு நன்நெறிகளைப் போதித்து அன்புடனும் பண்புடனும் நேசித்து வருவோமானால் எதிர்காலச் சமூகத்தை ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சமூகமாக உருவாக்க முடியும் என்றார்.(அ-79)



## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தமது ஆன்மாவின் பெருமையில் நம்பிக்கை இன்மையே நாத்திகம் என்று வேதாந்தம் கூறுகின்றது. சந்தேகமின்றி பலருக்கு இது பயங்கரக் கருத்துத்தான். இது அடையமுடியாத குறிக்கோள் என்று நம்மில் பலரும் நினைக்கலாம். ஆனால் இதை ஒவ்வொரு மனிதனாலும் அடைய முடியும் என்று வேதாந்தம் வலியுறுத்துகிறது.

சுவாமி விவேகானந்தர்

# அரசிற்கான ஆதரவை விலக்க ஜாதிக ஹெலஉறுமய தீர்மானம்

பொதுக் கட்டமைப்பை விலக்கிக்கொள்ளும்வரை அரசாங்கம் கொண்டுவரும் எந்தவொரு சட்ட மூலத்திற்கும் ஆதரவு வழங்குவதில்லையென்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போது ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் எதிர்த்த ஆவணமொன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் நோக்கில் பாராளுமன்றம் சென்ற நாங்கள் மக்களுக்கு தீமை ஏற்பட ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

ஆனால் ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டதன் மூலம் எம்மையும், எமது மக்களையும், எமது சமயத்தையும் அவமதித்திருக்கிறார். எனவே அவருக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

அதனை நாங்கள் வழங்கமாட்டோம். மக்களே அவர்களைத் தெரிவுசெய்தனர். எனவே மக்கள் அவருக்குத் தண்டனை வழங்க வேண்டும். அதனை நாங்கள் பார்க்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## நீதிபதி....

பெற்றன.

சுமார் 21 நாட்கள் நடைபெற்ற இவ் வழக்கு விசாரணையின்போது 45 பேர் சாட்சியமளித்துள்ளனர். விசாரணையின் பின் குற்றவாளிகளான முகமட் நியாஸ், பெள்வ் நிஸாந்த உதயகுமார, சம்பத் துஷார, அபய விக்கிரம, சுஜித் ரோகன ரூபசிங்க, சுமித நிரோஷன் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நீதிபதி சரத் அம்பேபிட்டிய அவரது வாசஸ்தலத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன் அவரது வாகன சாரதியும் கொல்லப்பட்டது தெரிந்ததே. (ச-8)

## குண்டுத் தாக்குதலில் ஒருவர் பலியானார்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு அரிசி ஆலைஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். (ச-8)

## சுனாமி...

தலைப் புலிகளுடனான இப்பேச்சுவார்த்தை அரசுக்கு உரிய பயனைக்கொடுக்கலாம் என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தேக்கநிலையில் இருந்து வரும் நிலையில் சுனாமி நிவாரணப் பணிகளை கூட்டாக மேற்கொள்வது குறித்து நோர்வேப் பிரதிநிதிகளுடனும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## இராணுவத்...

கப்பட்டு வாயிலும் மறிக்கப்பட்டு போராட்டம் நடைபெற்றது. இதனையடுத்து அப் பகுதியெங்கும் பெருமளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'பாதுகாப்பு முட்கம்பிகளை அகற்று', 'பாஸ் நடைமுறையை முற்றாக நிறுத்து', 'சொத்துக்களை திருப்பிக் கொடு' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளைத் தாங்கிய வண்ணம் ஈடுபட்டனர்.

அத்துடன் நேற்று குருநகர் எங்கும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டும், மீன்பிடித் தொழிலுக்குச் செல்லாமலும் துக்கதினம் அனுஷ்டித்தனர்.

மேலும் மாலை 3 மணிக்கு இறந்தவரின் சடலம் எடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ச-19-122)

## பொதுக் கட்டமைப்பை...

தேச சமூகத்தை மனமாற்றத்திற்குள்ளாக்கவும் அது முயன்றது.

ஆனால், நீதியானதும் - ஜனநாயகத் தன்மை கொண்டதுமான அந்த அரசியல் முடிவில் சர்வதேச சமூகம் உறுதியுடனே இருந்தது.

இந்த அரசியல் யதார்த்தத்தை ஏற்று உடன்பாட்டில் கைச்சாத்திடும்படி சிங்கள அரசுக்கு அது ஆலோசனை கூறியது. நிர்ப்பந்தங்கள் கொடுத்தது. இறுதியில் சர்வதேச அழுத்தங்களுக்கு பணிந்து சந்திரிகா அரசு உடன்பாட்டில் கைச்சாத்திட்டும் விட்டது.

சந்திரிகா அரசு இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருந்தாலும் அதை முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளும் புறச்சூழல் சிங்கள தேசத்தில் இன்னும் எழவில்லை.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதால் சிங்களப் பேரினவாதிகள் கொதிப்படைந்து போயுள்ளனர். ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் பௌத்த மத உயர் பீடத் தலைவர்கள் - பிக்குகள் உடன்பாட்டிற்கு எதிராக வீதியில் இறங்கிவிட்டனர்.

சிங்கள நீதிமன்றுகளில் வழக்குகளும் தாக்கல் செய்துவிட்டனர். மதில் மேல் பூனையாக இதுவரை நாளும் மௌனமாக இருந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுக்கட்டமைப்பில் பிழைகள் கண்டுபிடித்து கண்டன அறிக்கையும் விடுத்துள்ளது.

சிங்களப் பத்திரிகை உலகமும் இவர்கள் அனைவரதும் இனவாதக் கருத்துக்களை ஆதரித்தும் பெரிதுபடுத்தியும் சிங்கள மக்களிடம் இனவெறி உணர்வூட்டி வருகின்றனர்.

போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று வருடங்கள் ஓடி விட்டன. 'சுனாமி' பேரழிவு தாக்கி ஆறு மாதங்கள் கடந்து விட்டன. இந்தக் காலப் பகுதி முழுவதும் சர்வதேச சமூகத்தின் அமைதி முயற்சிக்குப் புலிகள் இயக்கம் முழு ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகின்றது.

ஆனால், சிங்கள அரசோ சர்வதேச சமூகத்திடம் தொடர்ச்சியாக முரண்பட்டே வருகின்றது.

இந்த நிலையில் தமிழ் மக்களை பொறுத்த வரையில் 'பந்து' புலிகளிடம் இல்லை, சிங்கள அரசிடமும் இல்லை. அது சர்வதேச சமூகத்தின் கைகளில் தான் உள்ளது. சிங்களத்தின் கடும் போக்கிற்கு எதிராக சர்வதேச சமூகம் செயற்படவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)


**நாதன்ஸ் சினிமா**

குளிரூட்டப்பட்டது | யாழ்.

இன்றுமுதல்

சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த

**6'2"**

காட்சி நேரம்: (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

வெகுவிரைவில்

அர்ஜுன், சினேகா நடித்த

**சின்னா**

**நிறைஞ்சனாஸ் சினிமா**

சங்கானை

COLIN TARIL, ANJELINAJOLIE And ANTONY HOPKINS

நடித்த

**ALEXANDER**

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 [பு.நே]

**மனோகரா**

யாழ்ப்பாணம்

ஷங்கரின் இயக்கத்தில்

சியான் விக்ரம், சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

**அந்நியன்**

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

இசை: ஹரீஸ் ஜெயராஜ்





**நியூ சிற்றி ரேடேர்ஸ்**

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவிதமான ரேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகரணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

(C-அ-1348)

**NEW SCIENCE HALL**

யாழ்.நகர்

**A/L DAY CLASS**

துரித மீட்டல் வினாவிடை வகுப்பு

கணித விஞ்ஞானப் பிரிவு

திங்கள் முதல் வெள்ளி வரை

| | |
|---|---|
| PHYSICS ▸ திரு.குகன் | CHEMISTRY ▸ திரு.சிவத்திரன் |
| COM.MATHS ▸ திரு.செந்தில்ராஜ் | BIOLOGY ▸ வழமையான ஆசிரியர் ▸ திரு.கெங்காதரன் |

ஆரம்பம் : 10.07.2005

ஞாயிறு காலை 8.00 மணி

(C-அ-1556)

**பதவி வெற்றிடம்**

▸ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
ஆண்கள் (இரவு /பகல் கடமை)

▸ பத்திரிகை விநியோகஸ்தர்கள
(சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர்)

வலம்புரி நிறுவனத்திற்கு 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 08.07.2005 அன்று காலை 10மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி.
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை காசிநாதன்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 65 A அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை காசிநாதன் 04.07.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - விசாலாட்சி (ஏபோட்டி) தம்பதிகளின் இரண்டாவது மகனும், காலஞ்சென்ற பரமநாதன், மற்றும் பரிமளம் தம்பதிகளின் மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாராணி, ரூபராணி (Canda) ஆகியோரின் பாசமிகு தந்தையும், த.சிவபாலன் ( ஆசிரியர், திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), சி.கேதீஸ்வரன் (Canda) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், க.பரஞ்சோதி (கணபதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), க.கந்தசாமி (காந்தன் களஞ்சியம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும்,

ப.விக்னேஸ்வரன் (கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்) ப.நாகரத்தினராஜா (இயன்மருத்துவர், (OMAN), ப.இராஜஇராஜேஸ்வரன் (பசறை), ப.கற்பகவல்லி, க.விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், சி.பராபரன் (யாழ். இந்து ஆரம்பபாடசாலை), சி.பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (05.07. 2005) காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

65A அரசடி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

தகவல்:
திருமதி கா.லோகேஸ்வரி
(மனைவி)

(9725)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.